Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 25 திங்கட்கிழமை (10.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 344

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)
















# கிழக்கில் யார் முதலமைச்சர்

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலையில் கூட்டணி அமைத்தே ஆட்சி அமைக்க வேண்டியுள்ள நிலையில் கட்சிகளுக்கிடையிலான பேச்சுக்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் யாரை முதலமைச்சராக நியமிப்பது என்பதில் இழுபறி நிலை நிலவுவதாக கிழக்கு மாகாணத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

35 ஆசனங்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14, இலங்கை தமிழரசுக்கட்சி 11, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7, ஐ.தே.க. 4, தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இந்த நிலையில் ஆட்சியை அமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அவசியமானது. இந்த இரு கட்சிகளில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றால் அக்கட்சியின் சார்பில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் அல்லது அடுத்த நிலையிலுள்ள அமீரலியா முதலமைச்சர் என்பதில் சர்ச்சை நிலவுகிறது.

தேர்தலின் பின்னர் அமீர் அலியை முதலமைச்சராக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்துவோமென அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்திருந்தார்.

மேலும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைக்க முன்வந்தாலும், அக்கட்சி 7 ஆசனங்களை மாத்திரம் கைப்பற்றியுள்ளமையால் அக்கட்சி முதலமைச்சர் பதவியை கோரும் தார்மீக உரிமையை இழந்து நிற்கிறது.

அதேவேளை தமிழ்த் தேசியக கூட்டமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க இணக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க


## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 200,044 | 14 | 31.58 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 193,827 | 11 | 30.59 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 132,917 | 7 | 20.98 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 74,901 | 4 | 11.82 |
| தேசிய சுதந்திர முன்னணி | 9,522 | 1 | 1.5 |
| மக்கள் விடுதலை முன்னணி | 3,154 | | 0.5 |
| செல்லுபடியான வாக்குகள் | 633,534 93.33% | | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 45,291 6.67% | | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 678,825 65.67% | | |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 1,033,749 | | |

(மேலதிக விபரம் 14 ஆம் பக்கத்தில்)

## எவருக்கு ஆதரவளிப்பதென்பது கலந்துரையாடலின் பின் முடிவு

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை அமைப்பதற்குத் தேவையான ஆசனங்களை எந்தவொரு கட்சியும் பெறாத நிலையில் ஆட்சியமைப்பதை தீர்மானிக்கும் சக்தியாக உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான இன்றைய கலந்துரையாடலின் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கும் என அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மாகாணத்தில் ஆட்சியை

19 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் முதலமைச்சராவதை ஏற்றுக் கொள்ளத் தயார்

### சம்பந்தன் அறிவிப்பு

ஊழலற்ற, நேர்மையாக செயற்படக்கூடிய முதலமைச்சர் ஒருவர்தான் எமக்குத்தேவை. அவர் முஸ்லிமா, தமிழரா என்பது முக்கியமல்ல. அத்துடன் தேவைப்பட்டால் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் என்று நேற்று முன்தினம் நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்தும் மாகாண சபை நிர்வாகத்தை அமைப்பது குறித்தும் பத்திரிகையாளர்களுக்கு நேற்று மாலை கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

19 ஆம் பக்கம் பார்க்க



## எண்ணெய் அகழ்வாராய்ச்சி அடுத்த வருடத்தில் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் இரண்டாவது கட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணிகளை அடுத்த வருடத்தின் முதற்காலாண்டுப் பகுதியில் முன்னெடுக்கவுள்ளதாக கெய்ன் இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்திய நிறுவனமான கெய்ன் மன்னார் கடற்பரப்பில் தனது முதற்கட்ட அகழ்வாராய்ச்சிப் பணியின் போது 3 எரிவாயுக் கிணறுகளைத் தோண்டியிருந்தது.

இதில் CLPL-Dorado-91H/1z and CLPL-Barracuda-1G/1 ஆகிய கிணறுகளில் எரிவாயு காணப்படுவதனை உறுதி செய்திருந்ததுடன் அதன் வணிக ரீதியான பெறுமதியினை இதுவரை

19 ஆம் பக்கம் பார்க்க

## 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

நடந்து முடிந்த கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைத் தேர்தல்களின் போது பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் சுமார் 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

சுமார் 21 இலட்சத்து 38 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## திருநெல்வேலியில் பயங்கரம் இளைஞன் அடித்துக் கொலை

(கிரு-சிகரம்)

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தேர் முட்டிக்கு அருகில் இளைஞன் ஒருவர் மற்றுமொரு இளைஞர் குழுவால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு இளைஞன் அடிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிரபா என்றழைக்கப்படும் பத்மநாதன் ஜென்சீலன் (வயது - 28) என்பவர் கொலை செய்யப்பட்டதுடன், அவருடைய நண்பரான இரத்தினசிங்கம் விமலராசா (வயது - 28) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் வன்னியின் மல்லாவிப் பகுதியில் கட்டட நிர்மாணத் தொழில் செய்பவர்கள் எனவும், நேற்றுக் காலையில்தான் அங்கிருந்து வீட்டுக்கு வந்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மாலை வேளையில் இவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்ததாகவும், முச்சக்கர வண்டியில் வீட்டுக்கு வந்த கொல்லப்பட்ட நபர் உணவருந்திக்கொண்டு இருக்கும்போது தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட ஒருவர் இவரை அழைத்ததால் இவர் வெளியே சென்றதாகவும் கூறப்படுகிறது.

முத்துமாரி அம்மன் தேர் முட்டிக்கு அருகில் இவர் நண்பர் ஒருவரால் அழைத்துச்செல்லப்பட்டபோது, முச்சக்கரவண்டியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் மத்திய செயற்பாடுகளுக்கான கட்டடத் தொகுதியின் பூர்வாங்க வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு நாளை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

2877 மில்லியன் ரூபா செலவில் ஜப்பான் அரசாங்கம் அமைத்துள்ள இக்கட்டடத் தொகுதியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, வைத்திய உபகரணங்கள் வழங்கல் பிரிவு, மத்திய ஆய்வுகூடம், மத்திய வழங்கல் பிரிவு, தொற்றுநீக்கும் பகுதி, சத்திர சிகிச்சைக் கூடங்கள், விம்பமாக்கல் மூலம் நோய் கண்டறிதல் பிரிவுகள் என பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன.

19 ஆம் பக்கம் பார்க்க

# உறவுகளுடன் உண்டு மகிழ்ந்த யாழ்.சிறைச்சாலைக் கைதிகள்





(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் இருபது கைதிகள் தமது விருப்பின் பேரில் தமது குடும்பத்தினர், உறவினர்களுடன் சேர்ந்து சிறைச்சாலை தினமாகிய நேற்றைய தினம் யாழ்.சிறைச்சாலையில் மதிய போஷனம் உண்டு மகிழ்ந்தனர்.

இவ்விழாவினைக் கைதிகள் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. விழாவிற்கு யாழ். சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி எஸ்.இந்திரகுமார் தலைமைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில், விருந்தினர்களாக யாழ். சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி செல்வி.சாந்த அபிமன்னசிங்கம், உதவித் தலைவர் திருமதி கே. பொன்னம்பலம், மேற்பார்வையாளர் இராசநாயகம், தமிழகன் ஆகியோரும் தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் சுமதி தனபாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பெண் கைதிகள் ‘குடியால் குலைந்த குடும்பம்’ என்ற நாடகத்தை அரங்கேற்றியதோடு, ஆண், பெண் கைதிகள் பாடல்கள் பாடியும் விழாவினைச் சிறப்பித்தனர்.

பல கைதிகள் கண்ணீர் மல்க தமது குடும்பத்தினருடன் மதிய உணவு உண்டனர். சிலர் தமது பிள்ளைகளுக்கு உணவூட்டி மகிழ்ந்தனர்.

வருடத்தில் ஒரு முறையேனும் தமது குடும்பத்தினருடன் உணவு உண்ணக் கிடைத்ததையிட்டு பல கைதிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

விழாவின்போது கைதிகளின் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள், நிதியுதவிகள் என்பன பரிசாக வழங்கப்பட்டன.

ஆண்டுதோறும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி சிறைக்கைதிகள் தினம் கொண்டாடப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# திறப்பதற்கு அனுமதித்தும் மூடிய நிலையில் பாடசாலைகள்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட 3 பாடசாலைகள் திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் மூடிய நிலையிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அல்லிப்பளை அ.த.க.பாடசாலை, வேம்பொடுகேணி அ.த.க. பாடசாலை, முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளே மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

அதேவேளை, அப்பிரதேசத்தில் சோரன்பற்று கணேச வித்தியாசாலை கோயில் வயல் அ.த.க. பாடசாலை, இயக்கச்சி அ.த.க. பாடசாலை, முகாவில் அ.த.க. பாடசாலை, மாசார் அ.த.க. பாடசாலை, தர்மக்கேணி அ.த.க. பாடசாலை, பளை மத்திய கல்லூரி, கிராஞ்சி அ. த.க. பாடசாலை, பளை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இயங்காதுள்ள பாடசாலையை மீள ஆரம்பித்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வழிசமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (11)

# சங்கானைக் கோட்டத்திற்கு புதிய கல்விப் பணிப்பாளர்



(வலிகாமம்)

சங்கானைக் கல்விக் கோட்டத்தின் புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளராக செல்வி.எம். அன்ரனி சாந்தா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இளவாலை றோ.க.த. பாடசாலையின் கடந்த பல வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த துரை எங்கரசு ஓய்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இந்த நியமனம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கடந்த 3ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது.

புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் தனது கடமைகளைக் கடந்த 3 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார். (06)

# புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் நிறுவுநர்தினமும், பரிசளிப்பு விழாவும்


புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் நிறுவுநர்தினமும் பரிசளிப்பு விழாவும், ‘சோமாஸ்கந்தன்’ சஞ்சிகை வெளியீடும் அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் இன்று காலை 7 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

நிகழ்வின் காலை அமர்வுப் பரிசளிப்பு விழாவாக இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிறுவுநர் நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவரும் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் ஆசிரியருமான க.துஸ்யந்தன் நிகழ்த்தவுள்ளார்.

நிகழ்வின் மாலை அமர்வு பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் சோமாஸ்கந்தன் மலர், புத்தூர் பிரதேச கல்வி மேம்பாட்டில் மழவராயரின் பங்கு என்ற பெயரில் அமைந்த நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இவ்வரங்கிற்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)



கோப்பாய் சிறுவர் மகிழ்வகத்தின் ‘இயற்கையின் வலிமை ஊடான ஒருமைப்பாடு’ என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்வி அமைச்சு, தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் யாழ்.மாவட்டத்திலுள்ள 60 பாடசாலை ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டது. குறித்த பயிற்சிப்பட்டறையைக் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல்துறைப் பேராசிரியர் சரத் கொட்டகம நெறிப்படுத்தியிருந்தார்.

இப்பயிற்சிப் பட்டறையை இலங்கை களபறவையியல் குழு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல்துறை மற்றும் டில்மா பாதுகாப்பு நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேவையாளனுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்கான உதவியினை வழங்கி வந்த பொறியியலாளரான இராமசாமி ஐயர் சுப்பிரமணியம் லண்டனில் காலமானார். இவரின் அஞ்சலிக்கூட்டம் யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா தலைமையில் குறித்த அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பாதிக்கப்பட்ட 19 மாணவர்கள் மற்றும் 3 பாடசாலை மாணவர்களுக்கும், தொடர்ச்சியான கல்வி உதவியினை வழங்கி வந்ததையிட்டு அவரது சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் குறித்த அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

அஞ்சலிக்கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# பொதுச் சேவையில் சாவகச்சேரி மாதர் சங்கம்

(சாவகச்சேரி)

பொதுமக்களுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய எந்தவொரு செயற்பாட்டையும் எமது கிராமத்தில் மாதர்களாகிய நாம் ஒன்றிணைந்து முன்னெடுத்தல் வேண்டும் என சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயசுற்றாடலைச் சிரமதானம் மூலம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது அங்கத்தவர்கள் பொது மக்களுடன் இணைந்து சிரமதானத்தை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களுக்கு நல்ல சேவையாற்றுவதாகவும், தொடர்ந்து மழை காலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயச் சுற்றாடல் துப்புரவு செய்யப்படுவதனூடாக சூழவுள்ள மக்களை டெங்குத் தாக்கத்திலிருந்தும் காப்பாற்றக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் ஒவ்வொரு அங்கத்தவரும் டெங்கு நோய் நுளம்புகளை ஒழிக்கும் விதமாகத் தமது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள பொது இடங்களையும், வாழ்விடங்களையும் சுத்தப்படுத்தக் கூடிய வகையில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இச் சிரமதானத்தில் மாதர் சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள் என்பலரும் கலந்து கொண்டனர். (11)

# யு.என்.டி.பி நிதியில் வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு உந்துபாலக்கட்டை சாந்தை வீதி யு.என். டி.பி. நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

விநாயகர் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான இவ் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி அகலிப்பு செய்வதற்கு அப்பகுதி இளைஞர்கள் பெரிதும் உதவி புரிந்ததுடன், சில இளைஞர்கள் எந்தவித ஊதியமும் பெறாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

அவர்களை ஊக்குவிக்கும் முகமாக கிராம வாசிகள் சிலர் சிற்றுண்டி உபசரணைகளை வழங்கி உற்சாகப்படுத்தினர்.

இப்படிப் பலரது அயராத உழைப்பினால் இவ்வீதி விரைவாக அகலிக்கப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

இப்பணிகளில் ஒத்துழைத்தவர்கள் மற்றும் யு.என்.டி.பி நிறுவனத்திற்கு அப்பகுதி மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (54)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மற்றும் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதேச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# கட்டுமீறிச் செல்லும் சிறுவர்துஷ்பிரயோகம் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு சிறுவர் விடயங்களுக்கு பொறுப்பான அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை இதுவரை எடுக்கவில்லை. இதனால் துஷ்பிரயோக சம்பவங்கள் கட்டுப்பாடின்றி அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவிக்கையில்,

யாழ் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த வாரம் ஆறு பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆறு சம்பவங்களில் நான்கு காதல் சம்பந்தமாக நடைபெற்றிருப்பதாகவும் இரண்டு நெருக்கமான உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனக் குறிப்பிட்டார். நேற்று முன்தினம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தச்சம்பவங்களின் விபரங்களை அவர் வெளியிட்டார். அதில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் இரண்டு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றது. தொல்புரம் மேற்குப் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் 15 வயதுச்சிறுமி காதல் என்ற போர்வையில் ஆண் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றார். கடந்த சித்திரை மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் குறித்த 25 வயதுடைய அந்த இளைஞர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டிருக்கின்றார்.

இதேவேளை மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமி ஒருவரை கடந்த இரண்டாம் திகதி இளைஞர் ஒருவர் முல்லைத்தீவு- புதுக்குடியிருப்புப்பகுதிக்கு அழைத்துச் சென்று அங்குள்ள வீடு ஒன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக்குடியிருப்புக்குச் சென்ற பொலிஸாரினால் அந்தச சிறுமி மீட்கப்பட்டிருக்கின்றார். சம்பந்தப்பட்ட இளைஞர் அங்கிருந்து தப்பியோடி தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்த குறித்த வீட்டில் வசித்த ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொளளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

குறித்த இளைஞர் மானிப்பாயைச் சேர்ந்தவர். மானிப்பாயில் நடைபெற்ற மற்றுமொரு சம்பவத்தில் 16 வயதுடைய பெண் ஒருவரை அந்த வீட்டில் தங்கியிருந்த 17 வயது இளைஞர் ஒருவர் காதல் தொடர்பு கொண்டு பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார். மடுப்பகுதியைச் சேர்ந்த பெண் அவரது சின்னம்மா வீட்டிற்கு வந்திருந்த போதுதான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதேவேளை மேலும் கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஒரு பாலியல்துஷ்பிரயோக சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. கோப்பாய்ப்பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் காதல் தொடர்பு காரணமாக இளைஞர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட் படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் கடந்த யூலை மாதம் 3ஆம் திகதி கோப்பாய் பொலிஸில் குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய அந்தப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். கொடிகாமம் பொலிஸ் பிரிவில் மிருசுவில் பகுதியில் 18 வயதுடைய மனநலம் குன்றிய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்த அவரது பெரியப்பா முறையானவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருக்கின்றார். கடந்த மாதம் 4ஆம் திகதி இது குறித்து முறைப்பாடு கொடிகாமம் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (பா)

## பேருந்துகளில் 'குடிமன்னர்கள்'

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வரும் நபர்களை இனங்கண்ட பின்பும் அவர்களைத் தங்களது பேருந்துகளில் ஏற்றிப் பயணிக்கச் செய்யும் நடத்துநர்கள் குறித்து பயணிகளும், பொதுமக்களும் மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர்.

மாலை நேரங்களில் மது போதையுடன் வரும் இந்நபர்களைப் பேருந்து நடத்துநர்கள் ஏனைய பயணிகளின் சௌகரியத்தைக் கவனத்திலெடுக்காது, தம் பேருந்தில் ஏற்றுவதாகவும், இதனால் பேருந்தினுள் நெரிசல் மிகுந்த நிலையில் மதுவாடை மற்றும் அவர்களின் தகாத வார்த்தைகளையும் கேட்டபடி பயணிக்க வேண்டியுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இப்படியான ஒரு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிப் புறப்பட்ட பேருந்து ஒன்றில் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (138)

## பட்டதாரி பயிலுநர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(அச்சுவேலி)

கடந்த இரண்டு மாதங்களிற்கு முன்னர் பல்வேறு அரச நிறுவனங்களிலும் பல்வேறு பதவிகளிலும் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் தங்களுக்கான முதலாம் மாத சம்பளம் சில பிரதேச செயலகங்களினால் இதுவரை வழங்கப்பட வில்லை என தெரிவிக்கின்றனர்.

தாம் அரச நிறுவனங்களில் பல்வேறு பணிநிலைகளில் இணைக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் சில பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் கடமை யாற்றி வரும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு முதலாம் மாத சம்பளம் வழங் கப்பட்டுள்ள போதிலும் தமக்கு சில பிரதேச செயலகங்களினால் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் தமக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை என மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். (03)

## நஞ்சருந்தி மரணம்

(கரணவாய்)

அல்வாய் கிழக்குப்பிரதேசத்தில் மனநோயாளியான ஒருவர் நஞ்சருந்தி மரணமடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் கிழக்கு அல்வாயைச் சேர்ந்த கிருஷ்ணாநந்தன் பகிர்தன்(வயது-29) என்பவரே மரணமடைந்தவராவர். இவரின் இறப்பு தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டுவருகின்றனர். (18)

## நீர் வழங்கல் திட்டத்திற்கு நிதி



(யாழ்ப்பாணம்)

பிறவுண்ஸ் நிறுவனத்தினரால் நீர்வழங்கல் திட்டத்திற்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் வேண்டுகோளுக்கிணங்க, மேற்படி நிறுவனத்தினரால் முதற்கட்டமாக திட்டத்திற்காக 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பிறவுண்ஸ் நிறுவனத்தினரால் முதலாம் கட்டமாக 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் 200 குடும்பங்களுக்கான நீர் வழங்கல் திட்டத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து நெரிசலைத் தடுக்க துரிதகதியில் ஏ-9 வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியின் திருத்தப்பணிகள் தென்மராட்சி மற்றும் யாழ். நகரப் பகுதிகளில் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

அகலிப்பு மற்றும் திருத்தப் பணிகள் இவ்வாண்டுக்குள் நிறைவடையும் தறுவாயில் இருப்பதோடு வடிகான்களின் மறுசீரமைப்பும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுகின்றது.

மழைகாலம் வருவதால் இப்பணிகள் துரிதப் பட்டுள்ளதாகவும் பாலங்கள் அமைக்கும் பணி கள் நிறைவடைந்திருப்பதாகவும் வீதி அகலிப்பு பணிகள் துரிதமாக நிறைவு செய்யலாம் என்றும் மழை காலத்தில் “காப்பெற்” இடுவது சிரமம் என்ற காரணத்தினாலும் தற்போது பணிகள் அனைத்தும் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இவ்வீதி புனரமைப்புப் பணியை மேற் கொள்ளும் நிறு வனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதடி, நாவற்குழி, செம்மணி போன்ற வெளிப்பிரதேசங்களில் திருத்தப் பணிகள் மழை காலத்திற்கு முன்னர் நிறைவு செய்யவுள்ளளோம். தொடர்ந்தும் யாழ்.நகரப் பகுதி வீதிகளும் நிறைவு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

திருத்தப்பணிகள் நடைபெறும் இடங்களில் ஏற்படும் வாகன நெரிசலைக் குறைக்க மாற்று பாதைகளைப் பயன்படுததமாறும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவோரின் அறிவுறுத்தலுக்கு அமைய வாகனங்களை செலுத்துமாறும் சாரதிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். திருத்தப்பணிகள் நடைபெறும் பகு திகளிலேயே அதிகம் வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)





யாழ்.சோனகத்தெரு ஜே-87 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்பு கூட்டம் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் யாழ் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் தர்மவம்ச தலைமை உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்து கொண்டோரையும் காணலாம். (105)

நீ எந்த மாற்றத்தை விரும்புகிறாயோ? அந்த மாற்றத்தை உன்னில் இருந்தே தொடங்கு. - அண்ணல் காந்தி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## இணக்க அரசியலுக்கு வெற்றி!

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பலரும் எதிர்பார்த்தது போலவே முடிவுகள் வந்திருக்கின்றன. அதைவிடத் துல்லியமாக எதிர்பார்த்ததைப் போலவே வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணத் தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன. தேர்தல் நடந்த மூன்று மாகாணங்களிலும் நாட்டை ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பெரும்பான்மை வாக்குகளைக் கைப்பற்றியுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மூவின மக்களும் ஏறத்தாழச் சமஅளவில் வாழ்கிறார்கள். அந்த மக்களில் பெரும்பான்மையானோர், சேர்ந்து வாழ்வதற்கான இணக்கத் தெரிவைச் செய்திருப்பது நம்பிக்கையளிப்பதாக உள்ளது.

தங்கள் வாக்குப் பலத்தைக் காட்டுவதற்காக தனித்தனியே போட்டியிட்ட கட்சிகளில் ஆறு கட்சிகளே குறிப்பிடக்கூடிய வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. ஏனைய கட்சிகள் கணிப்பிலெடுக்க முடியாத வாக்குகளையே பெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) ஆகியவையே அந்த ஆறு கட்சிகளும்.

சிறிய அளவிலான விலகல்களை ஒதுக்கிவிட்டால், தமிழரசுக் கட்சிக்கு விழுந்த வாக்குகள் தமிழ் வாக்குகள் மட்டுமே. இது 193,827 ஆகும். அதுபோல முஸ்லிம் காங்கிரசுக்கு விழுந்த வாக்குகள் முஸ்லிம்களின் தனி வாக்குகளே. இது 132,917 ஆகும். ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜேவிபி முதலான கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளை சிங்கள மக்களின் வாக்குகளாகக் கொள்ள முடியும். இது 87,577 வாக்குகளாகும்.

சந்திரகாந்தனின் தமிழ்க் கட்சி, அதாவுல்லா, ஹிஸ்புல்லா ஆகியோரின் முஸ்லிம் கட்சிகள் மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இணைந்த ஐ.ம.சு.கூட்டமைப்பில் மூவினக் கட்சிகளும் சேர்ந்து போட்டியிட்டன. இவர்களது தேர்தல் பிரசாரத்திலும், மூன்று தேசியங்களும் பகைமையை விட்டொழித்துச் செயற்படுவதன் மூலமே அமைதியான வளமான வாழ்வொன்றை நாம் அமைத்துக்கொள்ள முடியும் என்ற யதார்த்தம் பிரதான பேசுபொருளாக இருந்தது. 200,044 பேர் இதற்கு வாக்களித்திருக்கிறார்கள்.

இதன்படி ஐ.ம.சு.மு. 14 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது. பேரினவாதக் கட்சியாகிய ஐ.தே.க. வுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போவதாகக் கூறிய த.தே.கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், ஐ.தே.க. 4 ஆசனங்களையும் பெற்றுள்ளன. வர்க்க நண்பர்கள் இருவரும் கைகோர்த்தாலும் வரும் 15 ஆசனங்கள் ஆட்சியமைப்பதற்குப் போதாது. 18 ஆசனங்கள் இருந்தால்தான் ஆட்சியமைக்க முடியும்.

ஐ.ம.சு.மு வுடன் வீரவன்சவும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சியமைக்கும் வாய்ப்புகளே பிரகாசமாகத் தெரிகின்றன. இனவாதத்தைச் சூடாறவிடாமல் கிளறிக் கிளறி நாட்டையும் மக்களையும் மீண்டும் மீண்டும் பற்றி எரியவைக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தாத ஆட்சியொன்று அமைவதே கிழக்கு மக்களுக்கும் ஏன் முழு நாட்டுக்குமே நல்லது. கிழக்கின் பெரும்பான்மை மக்களும் அதையே விரும்பியிருக்கிறார்கள்.

தேர்தலுக்குத் தேர்தல் தமிழொற்றுமையை சர்வதேசத்துக்குக் காட்டுவதையே செய்துகொண்டிருப்பதை விடவும், நல்லிணக்கத்தின் பாதையில் அதிகாரப் பகிர்வுக்குச் சென்று சேர்வதே நமக்குத் தேவையானதும் நடைமுறைச் சாத்தியமானதுமாகும் என்பதை கிழக்குத் தேர்தல் முடிவிலிருந்தும் நாம் படித்துக்கொள்ள முடியும். - ஆசிரியர்

# ஐ.நா. சபை அதிகாரிகள் குழு சிவில் சமூகத்தினரையும் சந்திப்பர்

## தயாராகிறது புதிய நிகழ்ச்சி நிரல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகள் குழுவினர் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர். அதற்கான புதிய நிகழ்ச்சி நிரல் தற்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் ஐக்கிய நாடுகள்மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைப் பேச்சாளர் சின்டியா வெலிக்கோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் குழுவினரின் நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்களை வெளியிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆசிய, பசுபிக், மத்தியகிழக்கு, வட ஆபிரிக்க விவகாரங்களுக்கு பொறுப்பான ஹானி மெக்காலி தலைமையிலான குழுவினரே கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஒஸ்கார் சொலேரா மற்றும் அஸ்வா பெட்ரோ ஆகியோரும் இந்தப்பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். தேசிய சமாதானப் பேரவை உள்ளிட்ட பல்வேறு சிவில் அமைப்புக்களுடன் ஐக்கிய நாடுகள் அமைப்புப் பிரதிநிதிகள் சந்திப்பு நடத்தவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அலரி மாளிகையில் கபிலவஸ்து; அரசின் திட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட கபிலவஸ்து புனிதப்பொருளை அலரிமாளிகையில் நிரந்தரமாக காட்சிக்காக வைக்கப்படும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்துக்கு இந்திய அரசு ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவிற்கு விசேட இராப்போசன விருந்துபசாரமொன்றை வழங்கிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், கபிலவஸ்து புனிதப்பண்டம் தொடர்பில் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

புனிதப் பண்டத்தை காட்சிப்படுத்தும் காலத்தை ஒருவார காலத்திற்கு நீடித்தல், முடிந்தளவு இலங்கையின் பல பகுதிகளுக்கும் புனிதப் பண்டத்தை எடுத்துச் செல்லல் மற்றும் அலரி மாளிகையில் புனித பண்டத்தை காட்சிப்படுத்தல் ஆகிய கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கைகளில் முதல் இரண்டையும் ஏற்றுக் கொண்ட இந்திய அரசாங்கம், அலரி மாளிகையில் புனிதப் பண்டத்தை நிரந்தரமாக காட்சிப்படுத்தும் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

அலரி மாளிகைக் கட்டடமானது பிரதமர் அல்லது ஜனாதிபதியின் வாசஸ்தலம் எனவும் புனித வழிபாட்டுத் தலம் அல்ல எனவும் இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனவே புனிதப் பண்டமான கபிலவஸ்து பண்டத்தை அலரி மாளிகையில் காட்சிப்படுத்த முடியாது என இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# போக்குவரத்து அமைச்சருக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பு

(கொழும்பு)

தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு - யாழ்ப்பாணம், கொழும்பு - சிலாபம் மற்றும் கொழும்பு - மாத்தறை. ஆகிய வீதிகளில் அனுமதிப் பத்திரமின்றி பேருந்து சேவையில் ஈடுபடும் அரசியல்வாதிகள் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சில முக்கியமான அரசியல்வாதிகளும் இவ்வாறு தமக்கு எதிராக அச்சுறுத்தல் விடுத்து வருவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த பாதைகளில் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் பேருந்துகள் முக்கிய அரசியல்வாதிகள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு சொந்தமானவை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளைத் தடுத்து நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மதுபோதையில் மக்களுக்கு இடையூறு செய்தவர்கள் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப் பகுதியில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நான்குபேர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் நகர்ப்பகுதியில் குறித்த நான்கு இளைஞர்கள் மது அருந்தி விட்டு போதையில் வீதியால் சென்றவர்களுக்கு பெரும் இடையூறு விளைவித்தனர். இதனால் பீதியடைந்த பொதுமக்கள் நெல்லியடிப் பொலிஸாரிடம் இது குறித்து உடனடியாக முறையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் நால்வரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (18)

# மஞ்சள் கடவை இன்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற போதிலும முக்கியமான இடங்களுக்கு முன்னால் வீதிக்கடவைகள் (மஞ்சள்கோடு) போடப்படாமையால் பாதசாரிகள் சிரமங்களுக்குள்ளவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இம்மாவட்டத்தின் பொது வைத்தியசாலைக்கு முன்பாக மஞ்சள் கடவை போடப்படவில்லை. இதனால் வீதியைக் கடக்க முற்படும் பலர் அபாயத்துடன் நின்று நிதானமாக செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ் வைத்தியசாலைக்கு நாளாந்தம் அதிகளவிலான மக்கள் வருகை தருகின்ற நிலையில், வீதிக்கடவைகள் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் வீதி பிரதான வீதியாக அமைந்துள்ளதாக வாகனப் போக்குவரத்துக்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. இதனால் வீதியைக் கடப்போர் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.


எனவே பொதுமக்களை விபத்துக்களிலிருந்து பாதுகாத்து கொள்ளும் வகையில் குறித்த வைத்தியசாலைக்கு முன்பாக மஞ்சள் கோடு போடப்பட வேண்டும் என பயணிகளும், நோயாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

■ த. கடலவன்

**அண்மையில் 4ஆம் மாடிக்கு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முக்கிய பொது அமைப்பின் பிரமுகரிடம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தளபதிகள் சிலர் கண்ணீர்மல்க தமது விடுதலை தொடர்பில் கூட்டமைப்பினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு தமது விடுதலை தொடர்பில் கதைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.**

# கூட்டமைப்பின் தேங்காய் உடைக்கும் அரசியல்





தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஏமாற்று அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக தற்போது காவி உடை தரித்து அரசியல் செய்யும் நிலைக்கு அவர்கள் சென்றுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தாங்கள் குரல் கொடுக்கிறோம் என்று கூறி வந்த கூட்டமைப்பினர் நடைமுறை சாத்தியமான விடயங்களைக் கைவிட்டு தற்போது தேங்காய் உடைத்து அரசியல் செய்கின்ற நிலைக்கு வந்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் உருப்படியான கொள்கைகளை கூட்டமைப்பினர் எப்போதுமே கடைப்பிடித்தது கிடையாது. குறிப்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற போதிலும் மாவட்ட ரீதியான பாகுபாட்டினை தற்போதும் கடைப்பிடித்து வருகிறார். முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்த பின்னர் அரச படைகளிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தளபதிகள் சிலர் அரசாங்கத்தின் சிறைக்கூடங்களில் இருந்தபொழுது பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 47 விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதிகளை சம்பந்தன் அண்மையில் விடுவித்துள்ளார். இந்த செய்தி வெளியில் வெளிவராமல் இருந்த பொழுதிலும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விடுதலைப்புலிகளின் தளபதிகள் சிலர் தமது உறவுகளுக்கு சம்பந்தனின் பாகுபாடு தொடர்பில் தெரியப்படுத்தி கண்ணீர்மல்கி உள்ளனர்.

அண்மையில் 4ஆம் மாடிக்கு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முக்கிய பொது அமைப்பின் பிரமுகரிடம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த தளபதிகள் சிலர் கண்ணீர்மல்க தமது விடுதலை தொடர்பில் கூட்டமைப்பினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு தமது விடுதலை தொடர்பில் கதைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். 4ஆம் மாடியில் 'தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்புலிகளின் தளபதி களான செழியன், பூபால் உட்பட பல தளபதிகள், வடமராட்சியைச் சேர்ந்த கடற்தொழிலாளர் சமாசப் பிரதிநிதியான சூரியகுமாரன் 4ஆம் மாடிக்கு விசாரணைக்குச் சென்றபோதே, அவரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இவ்வாறு மாவட்ட ரீதியான பாகுபாட்டுடன் செயற்பட்டு வரும் சம்பந்தன் எவ்வாறு தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கப்போகின்றார் என சூரியகுமாரன் தனக்கு நெருங்கிய சிலரிடம் கவலையுடன் தெரிவித்ததாகவும் அறியவருகிறது.

இவ்வாறு அரசியல் கைதிகள் விடயத்தில் பாகுபாட்டை கடைப்பிடிக்கும் சம்பந்தனின் போக்கை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கைதிகளின் பெற்றோர்கள் வன்மையாக கண்டித்து வந்த சூழ்நிலையில், ஏற்கனவே 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்துடன் இணைந்து பல தமிழ் மக்களையும் காணாமல் போகச்செய்த அல்லது போவதற்கு துணை நின்ற சுரேஸ்பிரேமச்சந்திரன் தனது பாவங்களைக் களையும் நோக்குடன் தேங்காய் உடைத்து பாவம் தீர்க்க முற்பட்டுள்ளார். வவுனியாவிலுள்ள உல்லாச விடுதி ஒன்றில் அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் சிவசக்தி ஆனந்தனும் சுரேஸும் இணைந்து இந்த கூட்டுத் தேங்காய் உடைப்பிற்கு முடிவெடுத்துள்ளனர். சுரேஸ் பிரேமச்சந்திரனைப் பொறுத்தவரை கூட்டமைப்பினர் இவரை ஓரம் கட்டும் நடவடிக்கையில் கடைசி எல்லைக்குச் சென்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் இவ்வாறு தாம் ஓரம் கட்டப்பட்டால் அடுத்த கட்டமாக கூட்டமைப்பிலிருந்து பிரிந்து நின்று அரசியல் செய்யவேண்டிய சூழ்நிலை சுரேஸிற்கு ஏற்படும். இது தொடர்பில் ஏற்கனவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் சுரேஸ் பேச்சில் ஈடுபட்டதாகவும் ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் சுரேஸ் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து வந்தாலும் அவரை ஏற்பதில்லை என்ற முடிவில் உறுதியாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் 'மண்டையன் குழு'த் தலைவரென அழைக்கப்பட்டு வந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் மீது விடுதலைப்புலிகள் செயற்பாட்டுநிலையில் இருக்கும் வரைக்கும் சந்தேகத்துடனேயே சுரேஸைப் பார்த்து வந்தனர். சுரேஸ் தொடர்பில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் ஒரு விசேட பொறுப்பாளரையே யாழ்ப்பாணத்தில் நியமித்து செயற்பட வைத்து வந்தார். மறவன் என்ற பெயரில் செய்பட்டுவந்த இந்தப் போராளி பின் நாட்களில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின்போது விசுவமடுப்பகுதியில் சாவைத் தழுவியிருந்தார். இந்த புலிகள் இயக்க் உறுப்பினர் சமாதானக் காலப் பகுதியில் சுரேஸின் அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வந்ததுடன் சுரேஸின் செயற்பாடுகள் தொடர்பில் அடிக்கடி பொட்டம்மானுக்கு அறிக்கைகளையும் சமர்ப்பித்து வந்தார்.



இறுதிக் காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய செயற்பாடுகள் தொடர்பில் கவனித்து வந்த அனைத்துலக தொடர்பகத்தைச் சேர்ந்த திலீபன் என்பவருக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திலிருந்து ஒரு உத்தரவு வந்திருந்தது. சுரேஸை தமது அனுமதி இன்றி வன்னிப் பகுதிக்குள் உள்நுழைய அனுமதிக்க வேண்டாம் என்பதே அவ் உத்தரவாகும். இதனை அடுத்து சுரேஸ் வன்னிக்கு வரப்போவதாக அடிக்கடி திலீபனுடன் தொடர்புகொண்டு அனுமதி கேட்டபோதும் சுரேஸிற்கு இறுதிவரைக்கும் சாட்டுப்போக்கு சொல்லி அனுமதி மறுக்கப்பட்டே வந்தது.

சுரேஸை விடுதலைப்புலிகள் ஒரு போதுமே நம்பியது கிடையாது. இக்கோட்பாட்டையே தமிழ்தேசிய மக்கள் முன்னணியான கஜேந்திரகுமார் அணியினரும் கையாண்டு வருகின்றனர். சுரேஸ் தமது அணியுடன் இணைய முன்வந்தாலும் அவரை இணைப்பதில்லை என்பதில் உறுதியாக உள்ளனர். இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இந்திய இராஜ தந்திரிகளுடனும் இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுடனும் அடிக்கடி தொடர்பில் இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுதலைப் புலிகள் தொடர்பில் பல்வேறு இரகசியத் தகவல்களை கசியவிட்டதாகவும் சில ஆலோசனைகளை விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்காக கூறியதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு ஏதோ ஒரு விதத்தில் சுரேஸும் உடந்தையாக செயற்பட்டுள்ளார் என்பது யாருமே மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்தச் சூழ்நிலையில் தற்போது புதிய வேடம் தரித்து சிறைக்கூடங்களில் இருக்கின்ற தமிழ்கைதிகளையும் முன்னாள் போராளிகளையும், காணாமல் போனவர்களையும் மீட்டுத்தரவேண்டி 1008 தேங்காய் உடைத்து வவுனியாவில் உள்ள குருமண்காட்டுப் பகுதியிலுள்ள காளிகோவிலில் பாவம் தீர்க்க முற்பட்டுள்ளார் சுரேஸ் பிரேமச்சந்திரன். சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் இந்த நிகழ்வை, தான் கையில் எடுத்ததாகவும் யுத்தம் முடிவுற்று 3 ஆண்டுகளாகியும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது தமக்கு மனவேதனையை அளிக்கின்றது என்றும் சுரேஸ் நீலிக்கண்ணீர் வடித்துள்ளார். தேங்காய் உடைத்து அரசியல் செய்ய முற்பட்டிருக்கும் சுரேஸ் நாளை காவடி எடுத்து கண்டிவீதியில் வலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

தற்போது கூட்டமைப்பிற்குள்தோன்றி இருக்கும் உள்வீட்டுப் பிரச்சினை காரணமாக சுரேஸ் அணியினர் பல காலமாக ஓரம் கட்டப்பட்டு வருகின்றனர். கூட்டமைப்பிற்குள் வித்தியாதரன்- சரவணபவன் அணியினர் கால் வைத்ததை அடுத்து சுரேஸ் அணியினருக்கு கெட்டகாலம் தொடங்கிவிட்ட தெனலாம். இதனை அடுத்தே சுரேஸை வெளியில் விடுவதற்கான மறைமுகமான வேலைத் திட்டம் இடம்பெற்று வருகிறது. இவ் வேலைத் திட்டத்திற்குரிய ஆலோசனைகளை சிறிதரன் அவர்கள் வழங்கிவருகிறார். ஏற்கனவே சிறிதரனை நாடாளுமன்ற உறுப்பினராக்கிய சுரேஸிற்கு சிறிதரன் தொடர்ச்சியாக ஆப்படித்து வருகின்றமை புதிய விடயமல்ல. கூட்டமைப்பின் அரசியல் விளையாட்டுகளில் இதெல்லாம் சகஜம் என்றார் ஒரு பழுத்த அரசியல்வாதி. ●

# யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி பான் கீ மூனுடன் ஜனாதிபதி பேசுவார்



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் பிந்திய நிலவரம் குறிதது ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்தித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாத இறுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐககிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கில் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பான் கீ மூனைச் சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் 67 ஆம் அமர்வுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 26 ஆம் திகதி உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அடிதடிக்காரர் அநுராதபுரத்தில் கைது

(கொழும்பு)

வடமத்திய மாகாணசபை வேட்பாளர் ஒருவருக்குச் சொந்தமான வான் ஒன்றில் இரும்புப் பொல்லுகளைக் கொண்டு சென்ற நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம், மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் வைதது மேற்படி சந்தேகநபர்களைக் கைது செய்து அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# அதிக அதிகாரங்கள் வேண்டும் ஜனாதிபதியிடம் கோரிக்கை




(கொழும்பு)

கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவிற்கான அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரங்களை விஸ்தரிப்பதன் மூலமே காத்திரமான சேவையாற்ற முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறிச் செயற்படும் உயர் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்ககக்கூடிய வகையில் சட்ட திருத்தம் செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். 1996 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாக்கு எண்ணிய அதிகாரிக்கு ஆப்பு இடை நடுவில் வெளியேற்றம்

(கொழும்பு)

திருகோணமலையில் வாக்கு எண்ணும் மத்திய நிலையமொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரி ஒருவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் அதிருப்தி காரணமாகவே மேற்படி அதிகாரி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று அவ் உயரதிகாரி மேலும் கூறினார்.


# ஆஸி. கனவுடன் சென்றவர்கள் கர்நாடக பொலிஸாரிடம் சிக்கினர்

அத்தனை பேரும் இலங்கையர்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட 97 பேரை தென் இந்தியாவின் கர்நாடக மாநிலப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 95 பேர் அடங்குவதாக "தி ஹிந்து" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.




இவர்களில் 22 பெண்களும், 6 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

குறித்த குழுவினரை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி பணம் பெற்றுக் கொண்ட 13 பேரையும் கர்நாடக மாநிலப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மின் இணைப்பில் விசேட பயிற்சி மின்சார சபையுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் இலங்கை மின்சாரசபையுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள விசேட மின்னிணைப்பாளர் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடு செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதான அதிதிகளாக இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மின்வலு சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் க்றேரோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

க.பொ.த சாதரண தரப்பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி பாடங்கள் உள்ளிட்ட 6 பாடங்களில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகள் இப்பயிற்சி நெறிகளுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதில் தமிழ்மொழி மூலமாக 50 மாணவ மாணவிகளும், சிங்கள மொழி மூலமாக 450 மாணவ, மாணவிகளும் சேர்க்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ திலகரத்தின மற்றும் மின்சக்தி, வலு சக்தி அமைச்சின் செயலாளர் எம். என். சீ. பெர்டினான்டஸ் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

# வடக்கின் கரையோரங்களில் நட்சத்திர விடுதிகள் விரைவில்!

## அமெரிக்க உதவியுடன் முதலீடு

(கொழும்பு)

உல்லாசப் பயணிகளின் வருகையினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வடக்கு மற்றும் கிழக்குக் கரையோரங்களில் உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகள் அமைக்கப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த உல்லாச விடுதிகளை நிறுவுவதற்காக அமெரிக்கா 1592 டொலர்களை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஹோட்டல்களை நிர்மாணிப்பது தொடர்பாக வெளிநாடுகளைச் சேர்ந்த 217 முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், இவர்களில் 129 பேருக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2765 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 302 அறைகளை உள்ளடக்கும் மூன்று நட்சத்திரதரத்திலான ஏழு முன்னணி ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அவர் இந்த ஆண்டில் உல்லாசப் பயணிகளிடம் இருந்து 980 அமெரிக்க டொலர்களை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அடுத்த ஆண்டில் உல்லாசப் பயணத்துறை மூலம் 1300 அமெரிக்க டொலர்களை உல்லாசப் பயணிகளிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# நவீன கடைத்தொகுதி மாத்தளையில் அமையும்

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தின் நாவுல்ல நகரில் முழுமையான வர்த்தக தொகுதியொன்றை நிர்மாணிக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 50 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கவுள்ளது.

100 கடைத்தொகுதிகளைக் கொண்டதாக வர்த்தக வங்கி மற்றும் மீன்பிடித்துறை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக கடைத் தொகுதிகள் ஒதுக்கப்படவிருப்பதாகவும் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார்.



கோட்டை, ரஜமஹா விகாரையின் வருடாந்த தலதா பெரஹரா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. அந்தக் காட்சிகளில் சில....


# போக்குவரத்து சபையினரின் பணிகள் பொதுமக்களுக்காக அமைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கான சேவையை முன்னிறுத்தியதாகவே வடபிராந்திய போக்குவரத்து சபையினர் பணியாற்ற வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த மாவட்ட ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம் மற்றும் சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்துச் சேவையென்பது பொதுமக்களினதும், அவர்களது நலன்களைக் கருத்தில் கொண்டும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அவர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில் பொதுநலன் சார்ந்ததாகவே எமது நடவடிக்கைகள் அமையும் என்பதுடன், ஒரு போதும் சுயநலம் சார்ந்ததாக அமையாது என்றும் அதற்கு, தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் பணியாளர்கள் ஒவ்வொருவரும் சக பணியாளர்களை மதிக்கும் அதே வேளை, நிர்வாகத்திற்கு கீழ்ப் படிந்து நடக்க வேண்டுமென்றும், சமய வேறுபாடுகளுக்கப்பால் பொதுமக்கள் நலன்கள் விடயங்களில் துறைசார்ந்த எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே தொழிற் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகள், பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான வட பிராந்திய முகாமையாளர், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறையில் புதிய தபாலகம் அமைப்பது குறித்து ஆய்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபாலகத்தை பழைய இடத்தில் புதிதாக அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தபாலகம் தற்போது 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மேலும் இங்கு போதிய வசதிகள் இன்மையால் தபால் சேவையைப் பெறவரும் பொதுமக்களும் மற்றும் தபாலக ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் புதிய தபால் நிலையம் ஒன்றை ஏற்கனவே பழைய தபாலகம் அமைந்துள்ள பருத்தித்துறை - விநாயகர் முதலியார் வீதியில் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அண்மையில் யாழ்.வந்த தபால் மா அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் தபாலகம் அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# அதிபர் நியமனம்


(பருத்தித்துறை)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் புதிய அதிபராக சு.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இங்கு அதிபராக கடமையாற்றிய என்.தர்மலிங்கம் இளைப்பாறி சென்றதை அடுத்தே இவ்வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் முன்னர் கம்பர்மலை அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (109)

# பரமர் சங்கமம்



'சாண்பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை' என்றும், 'பெண்ணாகப் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும்' எனவும் ஆண்கள், பெண்கள் பற்றிய மேதா விலாசங்கள் பேசப்பட்டுள்ளன.

'ஆணில் கொஞ்சம் பெண்ணிருக்கும், பெண்ணில் கொஞ்சம் ஆணிருக்கும் கொஞ்சக் கொஞ்ச...' புதிய சினிமாப் பாடலில் இல்லிதமான வரிகள் வருகின்றன.

மேற்படி தத்துவார்த்த கருத்துக்கள் பொதிந்த பாடல்களும் முன்னர் வந்திருக்கலாம்; நினைவில் இல்லை. பரமர் இப்ப ஏனிந்த விவகாரத்தை பெரிதுபடுத்துகிறாரெண்டு யோசிக்கலாம்.

சமீபத்தில் ஒரு பத்திரிகையில் கேரளாவைச் சேர்ந்த சகானா என்னும் பெண் பல ஆண்களை ஏமாற்றிக் கல்யாணம் செய்து கொண்டதாகக் குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வெளி வந்திருந்தது.

ஏறத்தாள முப்பது வருடங்களுக்கு முன்பாக 'காதல் மன்னன்' ஜெமினி கணேசனின் நடிப்பிலும் தயாரிப்பிலும் "நான் அவனில்லை" என்னும் திரைப்படம் வெளிவந்தது.

அதையே ரீமேக் செய்து ஜீவா என்னும் நடிகரும் தானே நடித்தும் தயாரித்தும் அதே பெயரில் படமொன்றை வெளியிட்டிருந்தார். அதில் ஒரு ஆண் ஐந்து பெண்களை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மாதம், பெயர் பூண்டு திருமணம் செய்து கொள்வது சுவையாகப் படமாக்கப்பட்டிருந்தது.

அதனையும் மிஞ்சி அது சார்ந்த வழக்கு மிகவும் சுவாரஸ்யமாக அமைந்தது. இதுபோல ஒரு பெண்ணால் ஏன் செய்ய முடியாது? என்பதற்கு உதாரணமாகவே சகானாவின் செயற்பாடும் அமைந்துள்ளது.

உலகில் இதுதான் புதுமை எண்டில்லை. சகானா நான்கு ஆண்களை ஏமாற்றி திருமணம் செய்துள்ளாள். இதனையும் விடக் கூடிய எண்ணிக்கையில் திருமணம் செய்து கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் குறைவில்லை. எனினும் அவையொன்றும் சட்ட வரம்பு களுக்குள் மாட்டுப் படாமல் இருந்து வருவதே வெளிச்சத்துக்கு வராமல் போனதற்கான காரணம்.

பொதுவாக ஒரு ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட உறவுகளில் தோன்றும் வாரி சுகளே எங்கெங்கோ திரைஞ்சு உறவு முறைகள் மாறுபட்டுக் கிடக்கேக்க, இவ்விதம் ஒவ்வொருவரும் ஐந்தாறு திருமணங்கள் முடித்துக் கொண்டால் "அபூர்வராகம்" படத்தில் சொல்லப்படுகின்ற விடுகதைகள் போலாகாதா?

இதனாலோ என்னவோ நம் முன்னோர் திருமண பந்தங்களை செய்துகொள்ளவும் வரன் முறைகளைத் தோற்றுவித்தனர். அதுவே பிற்பாடு சட்டங்களாக்கப்பட்டன.

என்றாலும் இந்த ஆண், பெண் சமுதாயம் திருந்தவில்லை எண்டதைத் தானே, சகானா பற்றிய செய்தி சொல்லுது இல்லையே பின்ன...

# "தடுத்தற் சமிக்ஞை" புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதிப்புனரமைப்பு வேலைகளின் போது ஒருவழிப் பாதைகளை வாகன ஓட்டுநர்கள் உரிய முறையில் பயன் படுத்துவதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக\வீதிப் புனரமைப்பின் போது தடுத்தற்சமிக்ஞைகளைப் புறந்தள்ளிவிட்டு, தமது வாகனங்களை முன்நகர்த்த முனையும் ஓட்டுநர்கள் குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கப் படுகின்றன.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் விபத்துக்கள் ஏற்படுவதோடு, நேரவிரயமும் உண்டாவதாகக் கூறப்படுகிறது. (138)

# முரசின் இன்றைய பலன்

(10.09.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 25 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவாதிரை பின்னிரவு 1.02 வரை
சித்தாமிர்தம். திதி நவமி முற்பகல் 08.09 வரை பின் தசமி.
இராகுகாலம் 7.33 - 9.03 வரை. சுபநேரம் 12.03 - 1.33 வரை
எமகண்டம் 10.33 - 12.03 வரை, குளிகன் காலம் 1.33 - 3.03 வரை

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தடங்கல்கள் வரும். பொறுப்பு தேவை. பணக்கடன் பெறுவதை தவிர்க்கவும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க கூடாது. தாயிடமிருந்து ஊக்கம். |
| ரிஷபம் | மனதில் அமைதி. சமயோசிதம் உங்களைப் பாதுகாக்கும். தொழிலில் வளர்ச்சி. பணவரவு. கணவன் மனைவி அன்யோன்யம். சுற்றுலா பயண வாய்ப்பு. |
| மிதுனம் | மனதில் புத்துணர்வு. பலருக்கும் உதவுவீர்கள். தொழில் அபிவிருத்தியாகும். முக்கிய தேவை நிறைவேறும். நல்லோரின் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கடகம் | தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். கோபம் தணிக. அயலவருடன் தேவையற்ற பேச்சுகூடாது. வேலைப்பளு அதிகரிக்கும். கடன் உருவாகும். |
| சிம்மம் | உயர்ந்த செயல்களால் புகழ் பெறுவீர்கள். வாழ்க்கைத்தரம் உயர வழி பிறக்கும். புதிய சாதனை. உறவினரகளிடம் நெருக்கம். உடல் பிணி தொந்தரவு குறையும். |
| கன்னி | காரியங்களில் வெற்றி. நண்பர், ஊழியர்க்கு உதவுவீர்கள். வாழ்க்கை வசதி அதிகரிக்கும். ஆன்மிக ஈடுபாடு. அன்பு கிடைக்கும். இனிய கனவு வரும். |
| துலாம் | பிறர் நலத்தில் அக்கறை. சமயோசித பேச்சு அனுகூல பலன். தொழிலில் இலக்கு பூர்த்தியாகும். பணவரவும், நன்மையும் மன மகிழ்வு. தம்பதியர் ஒற்றுமை. |
| விருச்சிகம் | திட்டமிட்டவற்றை நிறைவேற்றுவீர்கள்.. சுறுசுறுப்பு. தொழிலில் தொந்தரவு. செலவு அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை தைரியம் தரும். மனதில் உறுதி. |
| தனுசு | மனதில் குழப்பம். பெரியவர்களின் வார்த்தையை மதிக்கவும். கூடுதல் உழைப்பு. பணச்செலவு ஏற்படும். எதிர்கால நலன் பற்றிய அக்கறை வளரும். |
| மகரம் | பெருமை. தொழிலில் உதவி கிடைக்கும். இலக்கு எய்தலாம். பணவரவு தாமதம். நண்பர்கள், உறவினரிடம பாராட்டு. விருந்து வரும். பிள்ளைகள் முன்னேற்றம். |
| கும்பம் | இன்பம் பொங்கும் நாள். பிழவாத குணத்தால் சிலரது அதிருப்தி. பணியில் கூடுதல் கவனம். பணப்புழக்கம் இருக்கும். உடல்நலம் சீராகும். குடும்ப மகிழ்ச்சி. |
| மீனம் | செல்வம் சேரும். உங்கள் ஆலோசனை மற்றவர்க்கு வழி காட்டும். நற்பெயர். தொழில் வளர்ச்சி அபரிமிதம். வாழ்க்கை வசதி வளரும். வழிபாட்டில் ஆர்வம். |

# முரளி நல்லிணக்க ருவென்ரி – 20 கிரிக்கெட் 2ஆவது வெற்றியைப் பதிவாக்கியது யாழ். மாவட்டம்



(யாழ்ப்பாணம்)

எட்வேட் எடினின் சிறப்பான அதிரடி ஆட்டத்தின் மூலம் முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரில் யாழ். மாவட்ட அணி இரண்டாவது வெற்றியைப் பதிவாக்கியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை, குட்னஸ் நிதியம், ரெட் டொட்ஸ், மஹேல நிதியம், பிறை எமரட்ஸ் ஆகியவற்றின் அனுசரணையுடன் தேசிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் முரளி நல்லிணக்க ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் நேற்றைய இரண்டாம் நாளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட அணிக்கும் அம்பாந்தோட்டை தெபரவாவ மகாவித்தியாலய அணிக்குமிடையிலான போட்டி பிற்பகால் 2.00 மணிக்கு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தெபரவாவ மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய யாழ். மாவட்ட அணி அணித் தலைவர் எட்வேட் எடினின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மாவட்ட அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எட்வேட் எடின் 24 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள்,நான்கு பவுண்டரிகள்அடங்கலாக 41ஓட்டங்களையும், கிளிங்டன் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களையும் ஆதித்தன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் டபிள்யூ. ஜி. லக்சஶ்ரீ 24 ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நான்கு பேர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெபரவாவ மகாவித்தியாலய அணி முதலிரு விக்கெட்டுக்களையும் எட்டு ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மிகிறான் இந்துசாந் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்ததுடன் யாழ். மாவட்ட அணி யின் பந்து வீச்சாளர்களையும் பதம் பார்த்தனர்.

இந்நிலையில் 15ஆவது ஓவரை வீசிய நோபோட் அந்த ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஆட்டத் தின் போக்கை மாற்றியமைத்தார். இறுதியில் அம்பாந்தோட்டை தெபரவாவ மகாவித்தியாலய அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மூன்றாவது விக்கெட்டுக்காக மிகிறான், இந்துசாந் இணை 64 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டது. மிகிறான் இரண்டு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்களையும், இந்துசாந் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நோபோட் மூன்று, எரிக் பிரதாப் இரண்டு, கோகுலன், கிளிங்டன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதேவேளை, இன்று காலை வவுனியா, மன்னார் இணைந்த அணியுடன் நடைபெறும் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெற்றிபெறும் பட்சத்தில் அரையிறுதிப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெறும்.

அரையிறுதிப் போட்டிகள் நாளைய தினமும், இறுதிப் போட்டி நாளை மறுதினம் ஓட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுக் காலை நடைபெற்ற முதல் போட்டியில் கண்டி திருத்துவக் கல்லூரி அணியும், வவுனியா, மன்னார் இணை அணியும் மோதின. முதலில் ஆடிய கண்டி திருத்துவக் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா, மன்னார் இணை அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (எஸ்.பி.)

## ஆடுகளங்கள் குறித்து கவலையில்லை



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் எவ்வாறான ஆடுகளங்கள் கிடைக்கப்பெற்றாலும் மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சாளர்களால் சாதிக்க முடியும் என அவ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

உப கண்ட ஆடுகளங்கள் பொதுவாக சுழற் பந்துவீச்சுக்குச் சாதகமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், எங்களுடைய 15 பேர் கொண்ட அணியில் எவ்வாறான சூழ் நிலைகளுக்குமேற்றவாறு பந்துவீசக்கூடிய பந்து வீச்சாளர்கள் காணப்படுகிறார்கள். ஆடுகளங்கள் வழங்கும் சவால்களுக்கு எங்கள் அணி தயாராக உள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இரண்டு பிரதான சுழற்பந்து வீச்சாளர்களான சுனில் நரைன் மற்றும் சாமுவேல் பத்ரி ஆகியோர் மட்டும் காணப்படுகின்ற போதிலும், மார்லன் சாமுவேல்ஸ், கிறிஸ் கெய்ல் ஆகியோரின் சுழற்பந்து வீச்சும் எங்களுக்குக் கைகொடுக்கும்.

ஒரு குறித்த ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சு சிறப்பாகச் செயற்படும் என அணித்தலைவர் கருதினால் அவர் கிறிஸ் கெய்லின் உதவியை நாடலாம்.

எங்களது அணியில் மிகுந்த தரமுடைய சுழற் பந்துவீச்சும், வேகப்பந்து வீச்சும் காணப்படுகிறது. எனவே எந்தவிதமான ஆடுகளங்கள் காணப்பட்டாலும், எந்தவிதமான மைதான நிலை காணப்பட்டாலும் எங்களால் சிறப்பாகச் செயற்பட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## வென்றது தென்னாபிரிக்கா



(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி – 20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ருவென்ரி–20 தொடரின் முதற்போட்டி றிவேர்ஸ் சைட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதில் கிறெய்க் கீஸ்வெட்டர் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், கிரேம் ஸ்வான் 13 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் ட்ரோட் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொஹன் போத்தா 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரொபின் பீற்றர்சன் 4 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெய்ன் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அல்பி மோர்க்கல் 3 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும் 4ஆவது விக்கெட்டுக்காக 90 ஓட்டங்கள் பிரிக்கப்படாமல் பகிரப்பட அவ்வணியின் வெற்றி உறுதியானது. இதில் கலிஸ் 44 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 54 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜேட் டேர்ண்பக் 4 ஓவர்களில் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ஃபின் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## முர்ரே இறுதிக்குத் தகுதி



(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு முர்ரே தகுதிபெற்றுள்ளார்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 3ஆம் நிலை வீரரான ஆன்டி முர்ரே (இங்கிலாந்து), 6ஆம் நிலை வீரரான தோமஸ் பெர்டிச் (செக்குடியரசு) மோதினார்கள். இதில் முர்ரே 5-7, 6-2, 6-1, 7-6 (9-7) என்ற செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார். அவர் அமெரிக்க ஓப்பன் இறுதிப்போட்டிக்கு நுழைவது 2ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2008ஆம் ஆண்டு தகுதி பெற்றார்.

ஒட்டு மொத்த கிராண்ட்சிலாமை பொறுத்தவரை 5ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளார். ஆனால் இதுவரை கிராண்ட்சிலாம் பட்டம் வென்றது இல்லை. முதல்முறையாக பட்டம் வெல்லும் ஆர்வத்துடன் முர்ரே உள்ளார்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





முரளி நல்லிணக்க ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நிகழ்வின் போது கிளிநொச்சி மாவட்ட அணி வீரர்களுக்கு இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன கைலாகு கொடுப்பதையும், முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்கார கிளிநொச்சி மாவட்ட அணி வீரர்களுக்கு கிரிக்கெட் நுணுக்கம் குறித்து விளக்கமளிப்பதையும் காணலாம். இந்நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுச் செய்திகள்

## பிளின்டொப் புதிய அவதாரம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அன்ட்ரூ பிளின்டொப் தொழில்சார் குத்துச்சண்டை வீரராகக் களமிறங்கத் திட்டமிட்டுள்ளார். இதில் அவர் ஒரு போட்டியில் மட்டுமல்லாது முழு தொழில்சார் குத்துச் சண்டை வீரராக திட்டமிட்டிருப்பதாக அவரது பயிற்சியாளரும் முன்னாள் உலக சம்பியனுமான பெர்ரி மக்கின் குறிப்பிட்டுள்ளார்.

இதன் முதல் கட்டமாக பிளின்டொப் எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி மான்செஸ்டரில் அதிபார குத்துச் சண்டை போட்டியில் பங்கேற்கவுள்ளார். எனினும் யாருடன் போட்டியிடப்போகிறார் என்று அறிவிக்கப்படவில்லை. எனினும் அவர் குத்துச் சண்டை வீரராக தயாராவதற்கு பிரிட்டன் குத்துச் சண்டை சம்மேளனத்தின் அனுமதிப்பத்திரம் வேண்டும். அந்த அனுமதியிலேயே அவரது குத்துச் சண்டை எதிர்காலம் தங்கியிருப்பதாக மக்கின் குறிப்பிட்டார். 34 வயதான சகலதுறை வீரர் பிளின்டொப் 2009 ஆஷஸ் வெற்றிக்குப் பின்னர் காயம் காரணமாக அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றார். அவர் 79 டெஸ்ட் மற்றும் 141 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

# மாவட்ட மட்ட கரப்பந்தாட்டம்; இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

(மட்டுவில்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு வைபவமும் இன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

'ஏ','பி' என இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் 'பி' பிரிவுக்கான இறுதி ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், புத்தூர் வளர்மதி அணியும் மோதவுள்ள அதே வேளை, 'ஏ' பிரிவுக்கான இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் சி. மனோகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை, கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளையின் பிரதம முகாமையாளர் தி. ஜேசுதாசன், சுன்னாகம் சிங்கர் நிறுவன முகாமையாளர் ப. கோபிகிருஷ்ணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் நிறைவில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் மூத்த மற்றும் 2011, 2012 ஆண்டுக்கான சிறந்த கரப்பந்தாட்ட வீரர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். மூத்த வீரர்களான காங்கேசன்துறை ஐக்கிய அணியைச் சேர்ந்த தி. செல்வராசா, நீர்வேலி ஐக்கிய அணியைச் சேர்ந்த சி. அப்புத்துரை, மட்டுவில் மோகனதாஸ் அணியைச் சேர்ந்த வே. மகாலிங்கம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் 2011, 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக ஆவரங்கால் மத்தி அணியைச் சேர்ந்த சி. சிவசொரூபன், சிறந்த வீராங்கனையாக காங்கேசன்துறை ஐக்கியம் அணியைச் சேர்ந்த பா. புகழரசி ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் புகழரசி தேசிய இளைஞர் சேவை மன்ற அணிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மூத்த மத்தியஸ்தராக க. நாகேந்திரம் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (118)

## கோட்டைவிட்டது பயஸ் ஜோடி

யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் இரட்டையர் இறுதிப் போட்டியில் கோட்டைவிட்ட இந்தியாவின் பயஸ், ஸ்டெபானக் (செக் குடியரசு) இரண்டாவது இடம் பெற்றனர். நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் பயஸ், ஸ்டெபானக் ஜோடி, அமெரிக்காவின் பாப், மைக் பிரையன் சகோதரர்களை எதிர்கொண்டது. முதல் செட்டை பயஸ் ஜோடி 3-6 என இழந்தது. இரண்டாவது செட்டையும் 4-6 என பறிகொடுத்தனர். இறுதியில் பயஸ், ஸ்டெபானக் ஜோடி 3-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வி அடைந்து, இரண்டாவது இடம் பெற்று ஆறுதல் தேடினர். பாப், மைக் பிரையன் சகோதரர்கள், தங்களது 12ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்று சாதித்தனர்.

# கனமிர்தன், லோகதீசன் சிறப்பு பந்துவீச்சு கொக்குவில் இந்துவை வென்றது சென்.ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

கனமிர்தன், லோகதீசன் ஆகியோரின் சிறப்பான சுழற்பந்து வீச்சின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டமொன்று கடந்த புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 41.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துவாரகசீலன் 32, கௌரங்கன் 19, கனமிர்தன் 17, கபில்ராஜ் 15 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் கீர்த்திஜன் மூன்று, கனுசாந், லிங்கநாதன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கனமிர்தன், லோகதீசன் ஆகியோரின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் லிங்கநாதன் மற்றும் சத்தியன் ஆகியோர் ஓரளவு தாக்குப்பிடித்து அணியின் கௌரவமான தோல்விக்கு வழிவகுத்தனர். இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 35.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லிங்கநாதன் 16, சத்தியன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

பந்து வீச்சில் கனமிர்தன் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், லோகதீசன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். (எஸ்.பி.)

# கிண்ணம் வென்றது அச்சுவேலி ஸ்ரார், ஆவரங்கால் இந்து

(புத்தூர்)

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்தின் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி ஸ்ரார், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் கிண்ணம் வென்றன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடர் 'ஏ', 'பி' இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது.

இதன் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இரவு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் நடைபெற்ற 'பி' பிரிவுக்கான இறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை ஸ்ரார் அணியும் அடுத்த இரு செட்களையும் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணியும் கைப்பற்றியிருந்தன. நான்காவது செட்டை ஸ்ரார் அணி கைப்பற்றி சமப்படுத்தியது. இந்நிலையில் வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டை வெல்ல இரு அணிகளுமே தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடியிருந்தன. இருப்பினும் அச்சுவேலி ஸ்ரார் அணி இறுதி செட்டை வென்று 3-2 என்ற கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரார் அணியைச் சேர்ந்த அ. தூரிசான் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான இறுதிப்போட்டியில் புத்தூர் கலைமதி அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியும் மோதின. இதில் முதலாவது மற்றும் மூன்றாவது செட்டை ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், இரண்டாவது மற்றும் நான்காவது செட்டை புத்தூர் கலைமதி அணியும் கைப்பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன. இந்நிலையில் தீர்க்கமான இறுதி செட்டை கைப்பற்றும் அணிக்கு கிண்ணம் என்பதால் இரு அணிகளும் தமது முழுப் பலம், ஆட்டத் தந்திரத்தை வெளிப்படுத்தி ஆடியிருந்தன. நான், நீ என்ற முறையில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி செட்டில் 17-15 என்ற கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக எஸ். செல்வதரன் தெரிவானார். இப்போட்டி நிகழ்வில் ஏராளமான கரப்பந்தாட்ட இரசிகர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

(118, 93, 02)



# இலங்கை தமிழர்களை ஆபத்துக்குள்ளாக்கி தமிழகத்தில் அரசியல் நடத்துதல்



சிநேகபூர்வமான போட்டிகளுக்காக இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குச் சென்றிருந்த இரண்டு கால்பந்து அணிகளுக்கு உடனடியாக மாநிலத்திலிருந்து வெளியேறுமாறு மாநில முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கட்டளையிட்டு இருந்தார்.

இதனை விமர்சித்து இந்தியாவில் வெளிவரும் "த ஹிந்து" பத்திரிகை வெளியிட்டு இருந்த ஆசிரியத் தலையங்கத்தில் "இன்று நாம் பாடசாலை கால்பந்து விளையாட்டு வீரர்களை வெளியேற்றுகிறோம், கிரிக்கெட் ஆட்டக்காரர்கள், உல்லாசப் பிரயாணிகள் மற்றும் யாத்திரிகள் ஆகியோரையும் வெளியேற்ற வேண்டும் என்று நாளை கூச்சல் எழும்" என குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்த ஆசிரியத் தலையங்கம் அச்சில் இருந்து வெளிவருவதற்கு முன்னரே அதில் கூறப்பட்ட எதிர்வு உண்மையாகிவிட்டது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டில் தஞ்சாவூர் - பூண்டிமாதா கோயிலுக்கும் பிரசித்தி வாய்ந்த அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திற்கும் தலயாத்திரைக்காக சென்ற 184 யாத்திரிகளை ஒரு கும்பல் அங்கிருந்து வெளியேறச் செய்ததோடு, மற்றொரு கும்பல் அவர்கள் திருச்சி விமான நிலையத்திற்கு வரும் வழியில் அவர்கள் பயணித்த பேருந்துகளையும் தாக்கியிருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரச படையினருக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தின் போது பெருமளவில் சாதாரண தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டியே தமிழக தலைவர்கள் அங்கு செல்லும் இலங்கை அரசியலோடும் அரச இயந்திரத்தோடும் தொடர்புள்ளவர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இதற்கென அவர்கள் தாமாகவே சில புள்ளி விவரங்களையும் தயாரித்துக் கொண்டுள்ளனர்.

போரின் இறுதிக் கட்டத்தின் போது 40,000 பேர் கொல்லப்பட்டதாகவே ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழக தலைவர்கள் இறுதிக் கட்ட போரின் போது ஒன்றரை இலட்சம் பேர் கொல்லப்பட்டதாக கூறுகிறார்கள். அவர்கள் எதனை ஆதாரமாகக் கொண்டு இந்தப் புள்ளி விவரங்களை முன்வைக்கிறார்களோ தெரியாது.

அதேவேளை, அரசாங்கம் அண்மையில் நடத்திய குடிசன மதிப்பீட்டின் பெறுபேறுகளின் படி 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் வட மாகாணத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 8000 என கூறப்பட்டது. இயற்கை மரணங்கள், கொல்லப்பட்ட புலி உறுப்பினர்கள், புலிகளால் கொல்லப்பட்ட சாதாரண மக்கள் ஆகியோரும் இந்த எண்ணிக்கையில் அடங்குவதாக அரசாங்கம் கூறியிருந்தது. இந்த குடிசன மதிப்பீடு பிழையானது என இதுவரை எவருமே கூறவில்லை.

ஆனால் தமிழ்நாட்டுத் தலைவர்கள் இந்தப் புள்ளி விவரங்களை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே அவர்கள் இலங்கை அரசியலோடும் அரச இயந்திரத்தோடும் தொடர் புள்ளவர்களை எதிர்க்கிறார்கள்.

கால்பந்து வீரர்களை வெளியேற்றியதை நியாயப்படுத்துவதற்காக ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தார். இலங்கைப் படையினருக்கு தொடர்ந்து பயிற்சி வழங்குவதாக கூறி மத்திய அரசாங்கம் தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்திக் கொண்டு இருக்கும் சூழ்நிலை



யில் இலங்கை கால்பந்து விளையாட்டு வீரர்களும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

படையினருக்கு பயிற்சி வழங்குவதனால் கால்பந்து வீரர்களை நாட்டுக்குள் அனுமதித்தமை தவறு என்பதே இதன் அர்த்தமாகும். இது என்ன வாதம் என்று ஜெயலலிதாவுக்கு மட்டுமே விளங்கும்.

அவரது செயலை அங்கீகரிப்போரினதும் அவரைப் பின்பற்றுவோரினதும் எண்ணிக்கை மிகச் சிறியது என்றே தெரிகிறது. திரைப்பட இயக்குனர் சீமானின் நாம் தமிழர் இயக்கம், வைகோவின் ம.தி.மு.க. போன்ற ஒருசில அமைப்புகளே சாதாரண இலங்கை மக்களை எதிர்க்கின்றனர். அண்மைக் காலத்தில் டெசோ மாநாட்டை கூட்டி பெரும் சர்ச்சையை கிளப்பிய தி.மு.க. தலைவர் கருணாநிதியும் விளையாட்டு வீரர்களை வெளியேற்றியதை விமர்சித்து இருந்தார். ஆனால் அவர் அதனை கண்டிக்கவில்லை. சி.பி.ஐ.எம். மட்டுமே அதனை "கண்டித்து" இருந்தது.

ஹிந்து பத்திரிகையும் தினமணி பத்திரிகையும் கால்பந்து வீரர்களை வெளியேற்றியதை தமது ஆசிரியத் தலையங்கங்கள் மூலம் விமர்சித்து இருந்தன.

எனவே தமிழ்நாட்டில் ஒரு சிலர் இலங்கையரை வெறுத்த போதிலும், பெரும்பாலானவர்கள் அறிவுபூர்வமாகவே பிரச்சினையை அணுகியிருக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்கள் இதனை விளங்கிக் கொண்டுள்ளார்களா என்பது கேள்விக்குறியே.




இந்த அபாயத்தைத் தான் தினமணி ஆசிரியரும் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அபாயத்தை ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனும் அக்கட்சியில் இருந்து அரசாங்கத்தில் சேர்ந்து கொண்ட கணேசனின் சகோதரர் பிரபா கணேசனும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"இலங்கை தமிழர்களுக்கு உதவுகிறோம் என்ற போர்வையில் சாதாரண இலங்கை மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறை சம்பவங்களினால் இலங்கை தமிழர்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. ஆனால் வன்முறையாளர்களின் இந்நடவடிக்கைகள் இந்நாட்டில் இருக்கின்ற தீவிரவாத இனவாத வன்முறை முட்டாள்களுக்குத் தான் உதவுகின்றன" என்று மனோ கணேசன் குறிப்பிட்டு இருந்தார்.

"தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும் இலங்கையருக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதலும் எதிர்ப்பும் ஒருபோதும் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு விமோசனத்தை பெற்றுத்தரப் போவதில்லை. மாறாக தென்னிலங்கையில் வாழும் தமிழர்களுக்கு பாதகத்தையே ஏற்படுத்தும்" என பிரபா கணேசன் குறிப்பிட்டு இருக்கிறார்.

இது தமிழ்நாட்டு அரசியலால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களின் குரலாகும். தென்னிலங்கையில் சிங்களவர்களோடு இணைந்து 16 இலட்சம் இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதாவது தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கு தெரியாது என பிரபா கணேசன் கூறுகிறார்.

தமிழ்நாட்டு தலைவர்கள் தமது அரசியல் இலாபத்திற்காகவே இந்தியாவிற்கு விஜயம் செய்யும் இலங்கையர்கள் மீது எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

தமிழக அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளின் உண்மையான நோக்கம் மாநில அரசியலேயல்லாமல் இலங்கை தமிழர்கள் மீதான அன்பு அல்ல என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனும் கூறுகிறார். அவர் இலங்கை தமிழர் பிரச்சினையை வைத்தே தமிழகத்தில் பல கட்சிகள் அரசியல் நடத்துவதாகவும் இலங்கையில் பிரச்சினை நீடிக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்புவதாகவும் கூறியிருந்தார்.

இது தான் உண்மை. ஆனால் அவர்கள் நேர்மையானவர்கள் என கடும்போக்குள்ள சிங்கள தலைவர்கள் நினைக்கிறார்கள், அல்லது அவ்வாறு நினைப்பதாக காட்டிக் கொள்கிறார்கள். அங்கு தான் பிரச்சினை இருக்கிறது.

**- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.**

---

# இந்தியன் வீட்டுத்திட்டமும் இலவு காத்த வன்னி மக்களும்

**- மு.தமிழ்ச்செல்வன் -**

வரும்.... ஆனா.... வராது..... என்பது ஒரு பிரபல்யமான தென்னிந்திய சினிமா நகைச்சுவை வசனம். ஆனால் வன்னி மக்களைப் பொறுத்த வரை, இந்தியாவின் வீட்டுத்திட்டம் தொடர்பில் அதன் நிலைப்பாடு மேற்படி வசனம் போன்றே காணப்படுகிறது. இந்திய அரசும் இலங்கை அரசும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் மேற்படி வசனத்தை ஒத்ததாகவே பேசி வருகின்றன. ஆனால் யுத்தத்தின் முழு பாதிப்பினையும் சுமந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் இந்திய வீட்டுத்திட்டத்திற்காக இலவு காத்த கிளியாகவே காணப்படுகின்றனர்.

மீள் குடியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இந்திய அரசு வடக்கில் மீள்குடியேறிய மக்களுக்கு ஐம்பதாயிரம் வீடுகளை அமைத்துத் தருவதாக பெரும் எடுப்பில் கூறினார்கள். ஆனால் கிளிநொச்சியில் பளை, அறிவியல்நகர் போன்ற பிரதேசங்களில் ஒரே இடத்தில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களைத் தவிர, இதுவரைக்கும் கூறப்பட்டமைக்கு அமைவாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் எல்லோரும் வீட்டுத்திட்டம் தொடர்பில் மக்களின் கேள்விகளுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தினையே பதிலாகக் கூறி வருகின்றனர். ஆனால் எந்தளவுக்கு எப்பொழுது நடைமுறையில் சாத்தியப்படும் என்பதுதான் தற்பொழுது மக்களிடம் இருக்கும் மிகப்பெரும் கேள்வி.

வன்னியில் யுத்தத்தின் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வீடுகளை இழந்த மக்களில் பெரும்பாலனவர்கள் தற்பொழுதும் காலாவதியாகிவிட்ட நிறுவனங்களின் தற்காலிக கொட்டகைகளிலும் சிதைந்து போன கொட்டில்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இன்னும் ஒரு சில மாதங்களில் மீண்டுமொரு பருவ மழைக்கு முகம்கொடுக்கப் போகின்றார்கள், அவலம் ஏற்படப் போகிறது தவிர்க்க முடியாதது.

ஏற்படபோகின்ற அவலம் இந்த வருடத்துடனாவது முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் மக்களின் வேண்டுதலாக உள்ளது. அந்த வேண்டுதல் நிறைவேற்றப்படுவது.இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் ்கைகளில். ஏனெனில் அதிகாரிகளின் தகவல்களின்படி வீட்டுத்திட்டம் தொடர்பில் தற்பொழுது கைவசம் இந்திய வீட்டுத்திட்டமே உண்டு.

யுத்தத்தின் பாதிப்புக்களை முழுமையாக சுமந்த மாவட்டமான கிளிநொச்சியில் மாவட்டச் செயலக திட்டமிடல் பிரிவின் தகவல்களின் படி சேதமடைந்த வீடுகளின் தொகை 35,823. இதில் முழுமையாகச் சேதமடைந்த வீடுகள் 26,867. பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் 8,956. இவற்றில் இதுவரைக்கும் அரச மற்றும் அரச்சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளினால் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 8,912.





# புத்தக அறிமுக / விமர்சனங்கள்




தமிழில் பதிப்பகங்கள் அதிகரித்துள்ளன. நூல்கள் வெளிவருவதும் அதிகரித்துள்ளது. பல்வேறு செய்தித் தாள்களிலும் வார, மாத இதழ்களிலும் தமிழ்ப் புத்தகங்கள் பலவற்றையும் அறிமுகம் செய் கிறார்கள். அவற் றைப் பல வலைத்தளங்களி லும் காணலாம். வெளியாகும் தமிழ் புத்தகங்கள் பற்றி உடனுக்குடன் அறிந்துகொள், புத்தக அறிமுகங்கள் மற்றும் விமர்சனங்களைத் தொகுத்து ஒரு வலைத்தளத்தில் தருகிறார்கள். அவற்றை இந்த வலைப்பதிவில் காணலாம்.
http://www.dialforbooks.in/reviews/

ஓம்னிபஸ் என்ற தளத்தில் புத்தகங்களை அறிமுகம் செய்து எழுதுகிறார்கள். அந்தத் தளத்துக்கான சுட்டி இங்கே.
http://omnibus.sasariri.com/

அழியாச் சுடர்கள் என்ற தளத்தில் பல்வேறு இலக்கியவாதி களை அறிமுகம் செய்து அவர்களுடைய சிறுகதைகளை முழுமை யாகத் தருகிறார்கள். அந்தத் தளத்தின் சுட்டி இங்கே.
http://azhiyasudargal.blogspot.in/

# பிளாஸ்டிக் பீரங்கி!




விளையாட்டுப் பொருளல்ல, பாதுகாப்புத் துறையில் 21ஆம் நூற்றாண்டிற்கான புதிய வரவு என்று வர்ணிக்கப்படும் பிளாஸ்டிக் பீரங்கி இது! பிளாஸ்டிக் மூலம் மிக வலிமையான போர்க்கருவியாக உருவாக்கப்பட்டுள்ளது. காலம் காலமாக போர்க்கருவிகள் செய்யும் தொழிலில் தனியிடத்தைத் தக்கவைத்திருக்கும் விக்கர்ஸ் என்ற இங்கிலாந்து நிறுவனம் அதைத் தயாரித்திருக்கிறது. வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கைக் கொண்டு புதிய வகை பீரங்கிகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

எடை குறைந்த இந்த பிளாஸ்டிக் பீரங்கி நடைமுறையிலுள்ள 70 தொன் பீரங்கிக்கு ஒரு மாற்றாக விளங்கும். கம்ப்யூட்டர் பொருத்தப்பட்டுள்ள இந்தப் பீரங்கியை ரிமோட் மூலமும் இயக்க முடியும். ஆறு மீற்றர் நீளமும் 2 மீற்றர் உயரமும் கொண்ட இந்தப் பீரங்கி ஒன்றரை தொன் எடையே கொண்டது. மின் காந்தங்களின் உதவி யுடன் இயங்கும் பிளாஸ்டிக் பீரங்கி மிகவும் வேகமாக நகரும் அதே சமயம், கரடுமுரடான பகுதிகளில் தாக்குதலை மேற்கொள்ளும்படியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நவீனகால போர் உத்திகளுக்கு ஏற்றதாக இது கருதப்படுகிறது. உலக நாடுகளிடையே இதற்குப் பெருத்த வர வேற்பு இருக்குமென விக்கர்ஸ் நிறுவனம் எதிர்பார்க்கிறது. சண்டையை விரும்பும் உலகம் இது. வேறெதை வரவேற்கும்?

ஒரு மிகப் பெரிய கம்பெனியின் நிர்வாகி ஓய்வு பெறும் காலம் வந்தது. அது அவரது சொந்தக் கம்பெனி. அடிமட்டத்தில் இருந்து வாழ்க் கையை ஆரம்பித்த அவர் சிறியதாக ஆரம்பித்த அந்தத் தொழிலை தன் கடுமையான உழைப்பாலும் புத்திசாலித்தனத் தாலும் மிக இலாபகரமான கம்பெனியாக வளர்த்திருந்தார். தனக்குப் பின் அந்தக் கம்பெனியை நிர்வகிக்க யாரை நியமிப்பது என்று நிறைய யோசித்தார். தன் பிள்ளைகளில் ஒருவரையோ, இருக்கும் பணிப்பாளர்களில் ஒருவரையோ தலைமை ஏற்கச் சொல்வதற்குப் பதிலாக, நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

தன் கம்பெனியில் எல்லாத் துறைகளிலும் அதிகாரிகளாக இருக்கும் திறமையான இளைஞர்களையும் அழைத்து சொன்னார். "அடுத்த வருடம் நான் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகப் போகிறேன். உங்களில் தகுதி வாய்ந்த ஒருவரை அந்தப் பொறுப்பிற் குத் தேர்ந்தெடுத்து என் கம்பெனியின் தலைவராக நியமித்து விட்டு ஓய்வு பெற நினைக்கிறேன்..."

அனைவருக்கும் ஒரே அதிர்ச்சி. அவர் தொடர்ந்தார்.

"உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதை தரப் போகிறேன். அது ஒரு தனித்தன்மை வாய்ந்த விதை. அதை நீங்கள் விதைத்து நீருற்றி ஒரு வருடம் வளர்க்க வேண்டும். சரியாக ஒரு வருடம் கழித்து, அடுத்த வருடம் இதே நாளில் ஒவ்வொருவரும் வளர்த்த செடியைக் கொண்டு வர வேண்டும். நீங்கள் கொண்டு வரும் செடிகளை வைத்து உங்களை எடை போட்டு அதில் சிறந்த ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுப்பேன்"

சொல்லி விட்டு அவர் ஒவ் வொருவருக்கும் ஒரு விதை தந்தார். அந்த இளைஞர்களில் மிக நல்லவனும், நாணயமானவனு மான ஒரு இளைஞன் அதை மிகுந்த ஆர்வத்துடன் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். நல்ல பெரிய மண்சட்டியை வாங்கி அதில் நல்ல வளமான மண்ணைப் போட்டு அந்த விதையை விதைத்து நன்றாகத் தண்ணீர் ஊற்றி வந்தான்.

மூன்று வாரங்களான பின்னும் அந்த விதை முளைக்க ஆரம்பிக்கவில்லை. ஆனால் மற்றவர்களோ கம்பெனியில் தங்கள் விதைகள் துளிர்க்க ஆரம்பித்து விட்டது என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பேச்சைக் கேட்ட போது அவனுக்கு கவலையாக இருந்தது. நிர்வாகி ஒரு தனித்தன்மை வாய்ந்த விதை என்றாரே அதை சரியாகப் பராமரிக்காமல் விட்டு விட்டோமோ என்று அவனுக்கு சந்தேகம் வந்தது. நல்ல உரம் எல்லாம் வாங்கிப் போட்டான். ஆனால் காலம் போன பின்னும் எந்த மாற்றமும் அவன் விதையில் இல்லை.

கம்பெனியிலோ அவரவர்களின் விதைகளின் வளர்ச்சியைப் பற்றியதாகவே பேச்சு இருந்தது. அவன் மேலும் பல முயற்சிகள் எடுத்துப் பார்த்தான். ஆனாலும் பயனில்லை.

ஒரு வருடம் கழித்து அந்த முக்கிய நாளும் வந்தது. பலரும் நன்றாக செழிப்பாக வளர்ந்திருந்த செடிகளோடு வந்திருந்தார்கள். போட்டி கடுமையாக இருக்கும் போலத் தான் அவனுக்குத் தெரிந்தது. அவன் ஒருவன் தான் வெறும் சட்டியைக் கொண்டு வந்தவன். பலரும் அவனை இரக்கத்துடன் பார்த்தார்கள். அவனுக்கு அவமானமாக

# யார் தலைவன்?



- என்.கணேசன் -

இருந்தது. எல்லோருக்கும் பின்னால் கடைசியாக நின்றான்.

நிர்வாகி வந்தவர் ஒவ்வொரு செடியின் வளர்ச்சியையும் பார்த்து பாராட்டிக் கொண்டே வந்தார். வெறும் மண்சட்டி யோடு நின்ற அவனைப் பார்த்தவுடன் அவர் கேட்டார். "என்ன ஆயிற்று?"

அவன் கூனிக் குறுகிப் போனாலும் நடந்ததைச் சொன்னான். தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளை எல்லாம் சொல்லி, அத்தனை செய்தும் பலனில்லாமல் போயிற்று என்று ஒத்துக் கொண்டான்.

நிர்வாகி அவனையே அடுத்த தலைவராக அறிவித்தார். அவன் உட்பட அனைவரும் அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தார்கள். அவர் சொன்னார்.

"நான் உங்கள் அனைவருக்கும் தந்தது நன்றாக வேக வைத்துப் பின் உலர வைத்த விதைகள். அவைகள் கண்டிப்பாக செடிகளாக வளர வாய்ப்பே இல்லை. உங்கள் விதைகள் துளிர்க்காமல் போன போது அதற்குப் பதிலாக வேறு புது விதைகள் போட்டு வளர்க்க ஆரம்பித்து விட்டீர்கள். இவர் ஒருவர் மட்டும் தான் அப்படி ஏமாற்றப் போகாமல் நேர்மையாக இருந்திருக்கிறார்."

"நீங்கள் அனைவரும் திறமையானவர்களே. அதில் எனக்கு சந்தேகமில்லை. அந்தத் திறமை இல்லாதிருந்தால் உங்களுக்கு என் கம்பெனியில் வேலையே கிடைத்திருக்காது. ஆனால் தலைவனாக ஆவதற்குத் திறமையுடன் இன்னொரு தகுதி கண்டிப்பாக வேண்டும். அவன் எதற்குத் தலைவனாக இருக்கி றானோ, அதற்காவது உண்மையாக இருக்க வேண்டும். அப்படி இருப்பவன் தலைமையில்தான் ஒரு நிறுவனம் நல்ல வளர்ச்சி அடைய முடியும். அப்படிப்பட்ட ஒருவராவது என் கம்பெனி யில் இருந்ததில் எனக்கு மகிழ்ச்சி. இவர் கையில் இந்தக் கம்பெனியை ஒப்படைத்தால் இந்தக் கம்பெனி கண்டிப்பாக நல்ல வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

அவனிடம் தலைமைப் பொறுப்பைத் தந்து விட்டு திருப்தியுடன் அவர் ஓய்வு பெற்றார்.


இது ஒரு நிறுவனத்திற்கு மட்டுமல்ல, கட்சி, அமைப்பு, கூட்டம், நாடு எல்லாவற்றிற்கும் பொருந்தும். அவன் அரிச்சந்திர னாக எல்லா விஷயங்களில் இருக்கிறானோ இல்லையோ, யாருக்குத் தலைவராக ஆகிறானோ அவர்களுக்காவது உண்மையாக இருக்க வேண்டியது அவசியம். அப்படி இருப்பவன்தான் அவர்களுக்கு நல்லது செய்ய முடியும். அவனே தலைவன், அப்படி இருக்க முடியாதவர்கள் ஏமாற்றுப் 'பேர்வழிகளே!

இதனை விட, மக்கள் சிலர் தாங்களாகவே சுயமாக வீடுகளைக் கட்டியவர்கள் போக, கிளிநொச்சி மாவட்டத்திற்கு இன்னமும் 24,263 வீடுகள் தேவைப்படுகின்றன. இதில் முழுமையாக சேதமடைந்த 18,427 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்த 5,836 வீடுகளும் உள்ளடங்குகின்றன.

தற்போது அரசிடம் இருக்கும் ஒரேயொரு வழி இந்தியன் வீடுகளே. அதிலும் கிளிநொச்சிக்கு கிடைக்க இருப்பது 7000 இந்திய வீடுகளே. எனவே மாவட்டத்தின் வீட்டுத்தேவை களை இந்தியன் வீட்டுத்திட்டம் கிடைத்தாலும் முழுமையாக தீர்த்து வைக்கமுடியாது.

நிலைமை அப்படியிருக்க இந்தியன் வீட்டுத்திட்டம் வருமா? வராதா? என்பதே தற்பொழுது மக்களிடம் இருக்கும் மிகப்பெரும் கேள்வி. குழந்தைப் பிள்ளைக்கு நிலவைக் காட்டுவதைப் போன்று அரசு இந்திய வீட்டுத்திட்டத்தை வன்னி மக்களுக்கு காட்டுகிறது. அதிகாரிகளோ, வரும் ஆனா... என்பதோடு நிறுத்திவிடுகின் றார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் எதுவும் புரியாத நிலையில் எதிர்வரும் பருவ மழையை நினைத்து அஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் இந்தியன் வீட்டுத்திட்டம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு குறிப்பாக வன்னி மக்களை பொறுத்த வரை இலவு காத்த கிளியின் பரிதாபமோ?

# கருத்துப் படங்கள்






## புதுக்குடியிருப்பு – ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

# அற்புதங்கள் நிகழ்த்தும் “வேப்பமர நாயகி”

அலெக்ஸ்பரந்தாமன்
- புதுக்குடியிருப்பு -

**முல்லைத்தீவு** மாவட்டத்தில் புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் வேணாவில் எனும் பழமைவாய்ந்த ஒரு கிராமம் உண்டு. பழம் பெருங்குடியினர் வாழ்ந்து வந்த இக்கிராமத்தில் கிராம தேவதையாக, காப்புத் தெய்வமாக, அடைக்கல அன்னையாக அபயமளிக்கும் இரட் சகியாக முத்துமாரி அம்மன் கோவில் கொண் டெழுந்தருளியதாக இங்குள்ள மூதாதையர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

புதுக்குடியிருப்பில் ஆரம்பம் முதல் ஆங் காங்கே பல ஆலயங்கள் இருந்துள்ள போதி லும், சக்தி மிக்க... அருள்பாலிக்கின்ற பெண் தெய்வங்கள் இல்லையென்றும், புதுக்குடி யிருப்பு கந்தசுவாமி கோவிலுக்கு தென்மேற் காக முக்கால் மைல் தூரத்தில் சுற்றிவர அடர்கானகத்தின் மத்தியில் அமர்ந்திருந்த வேணாவில் கிராமத்தில் மட்டுமே பெண்தெய் வமான முத்துமாரி அம்மன் ஆலயம் இருந்த தென்றும் கூறப்படுகின்றது.

இந்த இடத்தில் அம்பாள் ஆலயம் இருந்த தற்கான சான்றுகளாக இப்பொழுதும் ஒரு பூவரசு மரம், மஞ்சள் அலரி, தேசிமரம் மற்றும் வில்வமரம், வேப்பமரம் போன்ற மரங்கள் காணப் படுவதாகவும், ஆலயத்துக்காக கட்டப்பட்ட செங் கற்கள் தூர்ந்து பழுதடைந்து குவியலாக இருப் பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இவ்வேணாவில் கிராமத்தில் முத்துமாரி அம்மனை ஆசார ஒழுக்கத்தோடு, பயபக்தியுடன் வழிபட்டு வந்த பழம் மூதாதை யினர் வேணாவில் கிராமத்தைவிட்டு குடி பெயரும் பொருட்டு, தாங்கள் ஆதரித்து வழி பட்ட அம்மனையும் எடுத்துச் செல்ல விரும் பினர்.

இதன் பிரகாரம் பிரமாதீசவருடம் ஆவணி மாதத்தில் வேணாவில் கிராமத்திலிருந்து



ஆலயத்தின் எழிலார்ந்த முன்னைய நிலை

அம்மனை சகல சீர்வரிசைகளுடன் எடுத்துவந்து புதுக்குடியிருப்பு - செம்பாட்டுப்பக்கம் பரந்தன் நோக்கிச் செல்லும் வீதிக்கு அருகாக காரை வாய்க்கால் பக்கமாக ஸ்தாபிதம் செய்து வழி பட்டுக்கொண்டு வந்தனர். இவ்வாறு இம்மக்கள் வழிபாடுசெய்துவரும் காலத்தில், ஒரு பூசகரின் நெஞ்சின்மேல் உரல் வைத்து நெல்மணிகளை அதனுள் இட்டு குற்றி எடுக்கும் முத்தரிசியே நாயகப்பானையில் போட்டுப் பொங்கி வழிபடு வதை வழக்கமாகக் கொண்டு வந்தார்கள் எனவும், இது அவர்களின் பக்தி வைராக்கி யத்தை பறைசாற்றி நின்றதாகவும் கூறப்படு கிறது.

சித்திரைப் பௌர்ணமி தோறும் இப்பொங்கல் விழாவில் கொடிமரம் ஏற்றல், பட்டுநேருதல், மடைப்பண்டம் எடுத்தல், நோன்பு குத்துதல், கச்சு (வேட்டி) நேருதல், தூளி பிடித்தல், வளந்து வைத்தல், இளநீர் வெட்டுதல், பரிகலம் வழி விடுதல் என்பன நிகழ்வுகளாக நடை பெறும்.

இந்நிகழ்வுகளுக்கு முன்னதாக ‘முத்தரிசித் தெண்டல்’ எனும் நிகழ்வு நடைபெறுவதுண்டு. இந்த முத்தரிசித் தெண்டல் எனும் நிகழ்வானது, அம்பாளுக்கு ஊர்மக்கள் தங்களால் இயன்றளவு அரிசியையோ, நெல்லையோ காணிக்கையாகச் செலுத்துவதேயாகும்.

இந்த முத்தரிசித் தெண்டல் வைபவமானது வியாழக்கிழமை அம்மன் தன்பரிவாரங்களுடன் வழமையான வீதிகளூடாக பூசகர், விரதகாரர், மற்றும் மேளவாத்தியக்காரர், அடியார்கள்... என புடைசூழ தன் இருப்பிடத்தில் இருந்து ஆரம்ப மாகி வழமையான வீதிகளூடாகச் செல்கை யில், வேணாவில் வீதியில் அம்பாள் முன்பு இருந்த இடத்திற்குச் செல்வதற்காக பூசகரை வழிமறிக்கும் நிகழ்வு இடம்பெறும். பின்பு வழ மையான வீதிகளூடாக முத்தரிசித்தெண்டல் நடைபெற்று ஞாயிறு மாலை அம்பாள் தன் பழைய இருப்பிடத்துக்கு வந்து இளைப்பாறு வாள். மறுநாள் திங்கட்கிழமை பகல் அபிஷேக ஆராதனைகளுக்குப் பிறகு இரவு பொங்கலுக் குரிய நிகழ்வுகள் ஆயத்தமாகும்.

17 - 04 - 1981இல் குடமுழுக்கு செய்யப் பட்ட இவ்வாலயத்தில் 14 - 11 - 1997இல் மூல மூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. ஆயி னும், போருக்குப்பிந்திய இன்றைய நாட்களில் வழமையான பூசைகள் பாலஸ்தானம் செய்யப் பட்ட பின்பு நடைபெற்று வருகிறது.

ஆலய முன்றலில் வேப்பமரங்கள் பல நிற்ப தால் இந்த அம்மனை ‘வேப்பமர நாயகி’ என் றும் இக்கிராம மக்கள் அழைக்கிறார்கள். இப்படி யாக இந்த அம்மனை அழைப்பதற்கு அம்பாள் தன் அடியவர்க்கு நடத்திக்காட்டிய ஒரு அற்புத நிகழ்வே ஆகும்.

இந்நிகழ்வானது 27.07.2004 அன்று அம்பாள் ஆலயத்தில் ஆலய பூசகர் திரு. காசிவிசுவநாத சுவாமி அவர்கள் பூசை செய்து கொண்டிருக்கும் வேளையில், பகல் 12.15 மணியளவில் ஆலயத்தின் வடக்குப் பகுதியில் நிற்கும் பச்சை வேப்பமரக்கிளை திடீரென முறிந்து விழுந்து எரியத் தொடங்கியது. சம்பவத்தைக் கண்ட பூசகர் அவர் கள் நேரில் சென்று பார்த்தபொழுது, முறிந்த கிளையும் மரத்திலிருக்கும் மறுகிளையும் சுவாலை விட்டு எரிவதைக் கண்டார். நிலத்தில் விழுந்த கிளை தொடர்ந்து நான்கு நாட்களாக எரிந்து கொண்டிருந் ததை கிராம மக்களே திரண்டு வந்து அம்பாளின் அதிசயத் தைப் பார்த்துச் சென்றுள்ளனர்.



அற்புதம் நிகழ்ந்த வேப்பமரமும், அருகில் ஆலயமும்


ஆயினும், இந்நிகழ்வு குறித்து ஆலய பூசகர் யோசனையோடு வீற்றிருந்த சமயம், அன்று இரவு பூசகரின் மகள் கா. புஸ்பராணி என்பவருக்கு அம்பாள் கனவில் தோன்றி வேப்ப மரம் எரிந்ததற்கான காரணத்தைக் காட்டியுள்ளாள்.

ஆலயத்தில் வசந்தமண்டபப் பூசை நடக்கும் சமயத்தில் கோவிலின் வடக்குப்பக்க வேப்ப மரம் கணீர்... கணீர்... என்ற மணி ஒலியோடு சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. அப்பொழுது பச்சை நிறச்சாறி அணிந்து, தனது படைக்கலங்களோடு இருந்துள்ளாள் அன்னை. பின்னர் அம்பாள் வேப்பமரத்தில் இருந்து இறங்கி வசந்தமண்ட பத்திற்குள் சென்று அங்கு இருக்கும் அம்பாளு டன் சேர்ந்து இருவருமாகப் பாட்டுப்பாடி, அபிநயனக் காட்சியைக் காட்டியதோடு,என்னை இந்த இடத்தில்வைத்து பூசை செய்யும்படி... வாக குக்கொடுத்தபின்பு வேப்பமரம் சுடர் விட்டுப் பிரகாசிப்பதை பூசகரின் மகள் கண்டுள்ளார்.

இவ்வாறு அற்புதங்கள் நிகழ்த்திய ஸ்ரீமுத்து மாரியம்மன், கிராம மக்களின் ‘வெப்பநோய்’ தீர்க்கும் நாயகியாக மட்டுமல்ல, ‘மாரியம்மன் பாமாலை’ யில் கூறப்பட்டுள்ளது போன்று -

வாகானசேலை
வடிவாய் மடுத்துடுத்தி
சேலை நல்ல சேலை
தென்னம் பூச் சேலையம்மா
வாலை அபிராமி
வழக்காடும் வீரசக்தி
காப்புக்கொலுசு
கங்கணக்கை ஓசையிட
வேப்பம் பூஞ்சோலை
விதமாய் மடுத்துடுத்தி
முத்து மூக்குத்தி
முகத்தை அலங்கரிக்க
ரத்தின கிரீடம்
நவமணிகள் ஜோதிமின்ன...
மார்பிலணி முத்தாரம்
வைடூரியப் பொற்பதக்கம்
வாக்குச் சிலையழகி
வடிவழகுக் கேற்ற நல்ல...

- என்றவாறு அழகொளிர்வதோடு, கிராமத் தின் மத்தியில் வீற்றிருந்து அபயம் அளிக்கும் அன்னையாகவும் காட்சியளிக்கின்றாள்.



அம்பாளின் கருவறைத் தோற்றம்

# கால்நடை வைத்திய அலுவலகம் மருதங்கேணியில் திறந்துவைப்பு




(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி கால்நடை வைத்திய அலுவலக கட்டிட திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் சி.வசிகரன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்ற இப்பிரதேசங்களை துரிதகதியில் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை எமக்குண்டு. அந்த வகையில் மருதங்கேணி பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் என்றவகையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எக்காலத்திலும் மின்சாரமே வழங்கப்படாத இப்பிரதேசங்களுக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மின்சாரம் மற்றும் கடற்றொழிலாளர்களின் பயன்பாட்டுக்காக மீன்கூறுவிலைமடம், மீன்பதனிடும் நிலையம் என்பவற்றை அமைத்து வழங்கியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 58 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கால்நடைவைத்திய அலுவலகக் கட்டடத்தை ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் (ரங்கன்) துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பொறுப்பேற்பு

(பருத்தித்துறை)

பொலிகண்டி இ.த.க. பாடசாலை அதிபர் வே. துரைசிங்கம் கடந்தவாரம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இதனையடுத்து இப்பாடசாலையின் பிரதி அதிபராக இருந்த திருமதி என். விக்னேஸ்வரன் இந்தக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபருக்கான பிரிவுபசார விழா நேற்று பாடசாலை சமூகத்தினரால் சிறபபாகக் கொண்டாடப் பட்டுள்ளது. (109)

# நல்லூர் பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, ஈ.பி.டி.பி.யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெனின் ஆகியோர் தமது நிதியிலிருந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளனர்.

யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திற்கு மைதான சுற்றுமதில் அமைத்தலுக்கு 1 இலட்சம் ரூபாவும், யாழ். கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாசாலைக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கு 1இலட்சம் ரூபாவும், அரியாலை கிழக்கு மாதர் சங்கத்தின் தையல் இயந்திரக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், கொக்குவில் மேற்கு மாதர் சங்கத்தின் தையல் இயந்திரக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும்,கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலைக்கு மலசலகூடம் அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபாவும், கொக்குவில் மேற்கு கல்திட்டி ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி பாலர் பாடசாலை தளபாடக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், அரியாலை கிழக்கு பூம்புகார் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தளபாடக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கு 1 இலட்சம் ரூபாவும், ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், பாலர் பாடசாலை மற்றும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்திற்கு பரிவு உதவி கோரலுக்கு 50 ஆயிரம் ரூபாவும், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கட்ட வர்ணம் பூசுதலுக்கு 1 இலட்சம் ரூபாவும், ஜன சக்தி சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்காக 50 ஆயிரம் ரூபாவும், செல்லப் பிள்ளையார் ஆலயப் புனரமைப்புக்கு 1இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வளிமண்டலவியல் திணைக்களத்தால் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் இரு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை தொழில் நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு வளிமண்டலவியல் அவதானிப்பாளர், தொடர்பாடலாளர் பதவிக்கும் இலங்கை தொழில் நுட்பசேவையின் வகுப்பு (ii) இன்(ஆ) பிரிவின் தொலைத் தொடர்பு மற்றும் ராடர் அலுவலர் பதவிக்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும் எனவும், திறந்த போட்டிப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சையில் வளிமண்டலவியல் அவதானிப்பாளர் பதவிக்கான பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ளது.

தொலைத்தொடர்பு மற்றும் ராடர்அலுவலர் பதவிக்குரிய பரீட்சை, கொழும்பு மத்திய நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், வளி மண்டலவியல் திணைக்களம், பௌத்தலோக மாவத்தை கொழும்பு -7 என்ற முகவரிக்கு தனித்தனியாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் கடித உறையின் மேல் மூலையில் அவதானிப்பாளர், தொடர்பாளர் பதவி எனவும் இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் வகுப்பு (11) இன்(ஆ) பிரிவின் தொலைத்தொடர்பு மற்றும் ராடர் அலுவலர் பதவி எனவும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக தகவல்களை 2012.09.07 வர்த்தமானியிலும் அல்லது தினமுரசு காரியாலயத்திலும் பார்வையிடலாம்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 077 837 8824

---

பிறைற்இன் (விடுதி)ற்கு அறை பராமரிப்பாளர் (Room boy) சமையலாளர் (cook) தேவை. தொடர்புகளுக்கு: 021 222 1889 அல்லது இல 51, சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். இன்று தொடக்கம் 12ஆம் திகதி வரை காலை 8.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமுகமளிக்கவும்.

---

மானிப்பாய், ஆனைக்கோட்டை மற்றும் நவாலி ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்ட கட்டடத்துறை சார் மேற்பார்வையாளர்கள், கேபிள் ரி.வி. தொடர்பு பரிசோதகர்கள் (வயறிங் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது) சிட்டை எழுதுநர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 217 1051.

---

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பியோன் (ஆண்கள், பெண்கள்) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 071 907 5132.

---

ஐந்து வருட அனுபவமுள்ள கணக்காய்வாளர்கள் பிரபல கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்துக்குத் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு இல 55; 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

சர்வதேச கம்பனிக்கு முகாமைத்துவப் பயிற்சியாளர் தேவை. நான்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகைமை: க.பொ.த. சாதாரணம் ஆறுமாதகாலப்பயிற்சி. பயிற்சியின் நிறைவில் 30.000 -45,000 வரை பெற முடியும் தங்குமிட வசதி இலவசம் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வந்தோருக்கு முன்னுரிமை தொடர்புகளுக்கு 077 621 9536, 077 557 4795.

---

யாழ். நகரிலுள்ள தனியார் கிளினிக்குக்கு பெண் வேலையாட்கள் தேவை. க.பொ.த. (சா/த) இல் சித்தி எய்திய யாழ். நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் பெண்கள் தங்களது சுய விபரக் கோவையுடன் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமூகமளிக்கவும்.

---

எமது நிறுவனத்துக்குப் பொதி செய்யும் பகுதியில் வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள்தேவை. நாளொன்றுக்கு 350 ரூபா சம்பளம் வழங்கப்படும் நேரில் வரும் போது கிராம சேவகரின் சிபாரிசுக்கடிதமும் சுயவிபரக் கோவையையும் கொண்டு வரவும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், திருமணமாகாதவர்களுக்கும் முன்பு சுப்பர் மார்க்கெட்டில் பொதி செய்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு: சிவா நறுமணப் பூங்கா, இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

நல்லூர், மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு பணிப்பெண்கள் தேவை. ஆர்வமுடையோர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு தங்களது சுயவிபரக்கோவையுடன் சமூகம் தரவும், தொடர்புகளுக்கு இல 140 , கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது 077 700 9653, 077 362 7055.

---

திருநெல்வேலி பல்கலைக்கழக பகுதியில் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு: 077 420 6675

---

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு நிர்வாகம் செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை. தொடர்புக்கு 077 381 8799.

---

யாழ்.நகரிலுள்ள மூக்கு கண்ணாடி ஸ்தாபனத்திற்கு பெண் பணியாளர் தேவை. இல 211 நாவலர் வீதி யாழ்ப்பாணம். தொடர்பு 077 7166 390.

---

பிரபல நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றிற்கு கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களில் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தைப்படுத்தல் அதிகாரிகள் தேவை. அனுபவமுள்ளவர்களும், அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். மிக உயரிய ஆரம்ப சம்பளத்துடன் இலகுவாக மாதாந்தம் 30.000 உழைக்கலாம் உடன் தொடர்பு கொள்ளவும் 077 109 4406, 071 1300 222, 071 570 9498.

---

வயது25-45இற்கும் இடைப்பட்ட சமையலில் அனுபவமும், தேர்ச்சியும் பெற்ற பெண் ஒருவர், கொழும்பு 7இல் அமைந்துள்ள பங்களாவில் தங்கியிருந்து வேலை செய்ய உடனடியாகத் தேவை. தேசிய அடையாள அட்டை மற்றும் கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் விண்ணப்பித்தல் அவசியம். தொடர்புகொள்ள 077 770 1301.

# மாகாணசபைத் தேர்தல் –2012

## கட்சிகளின் வாக்கு அறுவடை ஒரே பார்வையில்...

### கிழக்கு மாகாணம்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 200,044 | 14 | 31.58 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 193,827 | 11 | 30.59 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். | 132,917 | 7 | 20.98 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 74,901 | 4 | 11.82 |
| தேசிய சுதந்திர முன்னணி | 9,522 | 1 | 1.5 |
| மக்கள் விடுதலை முன்னணி | 3,154 | | 0.5 |
| செல்லுபடியான வாக்குகள் | 633,534 | | 93.33% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 45,291 | | 6.67% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 678,825 | | 65.67% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 1,033,749 | | |

### வட மத்திய மாகாணம்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 338,552 | 21 | 61.23 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 196,127 | 11 | 35.47 |
| மக்கள் விடுதலை முன்னணி | 16,066 | 1 | 2.91 |
| எக்சத் லங்கா பொது ஜன கட்சி | 226 | 0 | 0.04 |
| ஜனசெத பெரமுன | 220 | 0 | 0.04 |
| ஐக்கிய சோசலிச கட்சி | 196 | 0 | 0.04 |
| செல்லுபடியான வாக்குகள் | 552,928 | | 95.18% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 28,010 | | 4.82% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 580,938 | | 64.49% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 900,873 | | |

### சப்பிரகமுவ மாகாணம்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 488,714 | 28 | 59.18 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 286,857 | 14 | 34.73 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 25,985 | 2 | 3.15 |
| மக்கள் விடுதலை முன்னணி | 12,164 | 0 | 1.47 |
| எக்சத் லங்கா மகா சபா | 331 | 0 | 0.04 |
| நவசம சமாஜ கட்சி | 286 | 0 | 0.03 |
| செல்லுபடியான வாக்குகள் | 825,850 | | 93.96% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 53,126 | | 6.04% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 878,976 | | 62.7% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 1,401,795 | | |

### மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 104,682 | 06 | 50.83 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 64,190 | 04 | 31.17 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். | 23,083 | 01 | 11.21 |
| சுயேட்சை குழு 8 | 5,712 | 0 | 2.77 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,434 | 0 | 1.18 |
| சுயேட்சை குழு 21 | 1,905 | | 0.93 |
| செல்லுபடியான வாக்குகள் | 205,936 | | 92.28% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 17,223 | | 7.72% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 223,159 | | 64.29% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 347,099 | | |

### அம்பாறை மாவட்டம்

| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 92,530 | 05 | 33.66 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். | 83,658 | 04 | 30.43 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 48,028 | 03 | 17.47 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 44,749 | 2 | 16.28 |
| மக்கள் விடுதலை முன்னணி | 2,305 | 0 | 0.84 |
| சோசலிச மக்கள் முன்னணி | 1,498 | 0 | 0.54 |
| செல்லுபடியான வாக்குகள் | 274,935 | | 94.26% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 16,744 | | 5.74% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 291,679 | | 66.1% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 441,287 | | |

### திருகோணமலை மாவட்டம்


| கட்சி | மொத்த வாக்கு | மொத்த உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 44,396 | 03 | 29.08 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 43,324 | 03 | 28.38 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். | 26,176 | 02 | 17.15 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 24,493 | 01 | 16.01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 9,522 | 01 | 6.24 |
| சுயேட்சை குழு 10 | 1,642 | 0 | 10.8 |
| செல்லுபடியான வாக்குகள் | 152,663 | | 93.09% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 11,324 | | 6.91% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 163,987 | | 66.83% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 245,363 | | |

### மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| இ.தமிழ் அரசு கட்சி | 34,705 | 77.44 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 8,603 | 19.2 |
| ஈழவர் ஜ.முன்னணி | 710 | 1.58 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 331 | 0.74 |
| சுயேட்சை குழு 11 | 151 | 0.34 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 72 | 0.16 |

### மட்டக்களப்பு மாவட்ட மட்டக்களப்பு தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| இ.தமிழ் அரசு கட்சி | 44,863 | 45.04 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 31,194 | 31.32 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 13,964 | 14.02 |
| சுயேட்சை குழு 8 | 5,355 | 5.38 |
| சுயேட்சை குழு 21 | 1,205 | 1.21 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,026 | 1.03 |




### மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 22,965 | 40.94 |
| இ.தமிழ் அரசு கட்சி | 21,876 | 39 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 8,604 | 15.34 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,014 | 1.81 |
| சுயேட்சை குழு 21 | 607 | 1.08 |
| ஈழவர் ஜ.முன்னணி | 434 | 0.77 |

### திருகோணமலை மாவட்டம் மூதூர் தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஸ்ரீ.தொ.கட்சி | 14,617 | 27.06 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 13,011 | 24.56 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 12,318 | 23.26 |
| இ.தமிழ் அரசு கட்சி | 10,213 | 19.28 |
| சுயேட்சை குழு 10 | 1,350 | 2.55 |
| தே.சு.முன்னணி | 490 | 0.93 |

### திருகோணமலை மாவட்டம் சேருவில் தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 17,785 | 44.6 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 7,148 | 17.93 |
| தேசிய சுதந்திர முன்னணி | 6,450 | 16.18 |
| அ.இ.தமிழர சுட்டணி | 5,014 | 12.57 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 2,390 | 5.99 |
| ம.விடுதலை முன்னணி | 518 | 1.3 |

### திருகோணமலை மாவட்ட திருகோணமலை தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| இ.தமிழ் அரசு கட்சி | 28,067 | 55.81 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 8,642 | 17.18 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 7,949 | 15.81 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,979 | 5.92 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,527 | 3.04 |
| அ.இ.தமிழர சுட்டணி | 259 | 0.51 |

### அம்பாறை மாவட்ட பொத்துவில் தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 31,952 | 37.5 |
| இலங்கை த.அ.கட்சி | 23,385 | 27.45 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 22,179 | 26.03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 6,684 | 7.85 |
| ஈழவர் ஜ.முன்னணி | 262 | 0.31 |
| மக்கள் வி.முன்னணி | 170 | 0.2 |

### அம்பாறை மாவட்ட சம்மாந்துறை தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 25,611 | 52.74 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 12,610 | 25.97 |
| இ.தமிழ் அரசு கட்சி | 8,767 | 18.05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,174 | 2.42 |
| ஈழவர் ஜ.முன்னணி | 76 | 0.16 |
| சோசலிச ம.முன்னணி | 76 | 0.16 |

### அம்பாறை மாவட்ட அம்பாறை தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 46,409 | 53.13 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 35,578 | 40.73 |
| ம.விடுதலை முன்னணி | 1,861 | 2.13 |
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 1,490 | 1.71 |
| சோசலிச ம.முன்னணி | 1,235 | 1.41 |
| சுயேட்சைகுழு 5 | 263 | 0.3 |

### அம்பாறை மாவட்ட கல்முனை தேர்தல் தொகுதி

| கட்சி | மொத்த வாக்கு | வீதம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். | 22,884 | 54.35 |
| இலங்கை த.அரசு கட்சி | 11,702 | 27.79 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 5,990 | 14.23 |
| மக்கள் வி. முன்னணி | 1,134 | 2.69 |
| சுயேட்சைகுழு 10 | 213 | 0.51 |
| சோசலிச ம.முன்னணி | 51 | 0.12 |

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

51. புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது புகைவண்டி நிலையத்தில் பெறவேண்டியது, (நுழைவுச்சீட்டு / பிரயாணச் சீட்டு)


52. ஒரு கடிதத்தை அனுப்புவதற்குத் தபாலகத்தில் பெறவேண்டியது (முத்திரை / காசோலை)


53. வங்கியில் பணம் பெறுவதற்குக் கொடுக்க வேண்டியது (குடும்ப அட்டை / காசோலை)

54. பஸ் நிலையத்தில் இறங்குவதற்குச் செய்ய வேண்டியது (சத்தமிடுதல் / மணி அடித்தல்)


55. இம்மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், 20ஆம் திகதி என்ன கிழமை (வியாழன் / வெள்ளி)

**இலக்கம் 56 - 58 வரையிலான வினாக்களுக்காகத் தரப்பட்டுள்ள குறியீட்டு விபரங்களைக் கவனித்து தரப்பட்டுள்ள குறியீட்டு உருக்கள் குறிக்கும் செய்தியை எழுதுக.**




56.  ..........................................

57.  ..........................................

68.  ..........................................

59. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
1. முளை இல்லாத பயிர் முளைக்காது.
2. பயிர் முளைக்க நீர் அவசியம்.
3. எதிர்காலத்தில் ஒருவரது முன்னேற்றம் எப்படி இருக்கும் என அவரது சிறுவயது நடவடிக்கையிலேயே காணலாம்.

60. "நான் விரும்பும் ஆசிரியர்" என்னும் தலைப்பில் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக.

..........................................
..........................................
..........................................
..........................................
..........................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பந்தியைக் கவனமாக வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

எமது நாட்டில் ரம்புட்டான் மல்வானைப் பிரதேசத்தில் சிறப்பாக வளரும். ரம்புட்டான் பழத்தின் தாயகம் மலேசியா ஆகும். சித்திரைப் புதுவருடத்தின் போது ரம்புட்டான் மரங்களில் பூ பூக்கும். ரம்புட்டான் பழத்தைக் கொத்துக் கொத்தாகக் கொய்து எடுப்பர். வாழையும் குணமிக்க ஒரு பழம் இதரை, கப்பல், கதலி என்று வாழையினங்கள் உண்டு. சாம்பல் வாழை, கறி வாழை சமைக்க உதவும். மா சுவையான பழமாகும். இதில் கிளி மூக்கன், கருத்த கொழும்பான் எனப் பல உண்டு. மாம்பழத்தினால் சட்னி, அச்சாறு, ஊறுகாய் என்பன தயாரிக்கலாம். பழம் காய்க்கும் காலங்களில் காகம், வௌவால், அணில், குரங்கு ஆகியன வரும். பிராணிகளிடமிருந்து பழங்களைப் பாதுகாக்க விவசாயிகள் பல உபாயங்களைக் கையாளுகின்றனர்.

01. இங்குள்ள பழ வகைகள் மூன்றும் எவை?
..........................................

02. இலங்கையில் ரம்புட்டானுக்குப் பிரசித்தி பெற்ற இடம் எது?
..........................................

03. ரம்புட்டான் மரத்தின் தாயகம் எது?
..........................................

04. வாழையின் இனங்கள் இரண்டின் பெயர்கள் தருக?
..........................................

05. கறி சமைக்க உதவும் வாழை எது?
..........................................

06. மாங்காய் இன வகைகளின் பெயர்கள் இரண்டு தருக?
..........................................

07. பழம் காய்க்கும் காலத்தில் வரும் பிராணிகள் நான்கின் பெயர்களைத் தருக?
..........................................

08. எதிரிகள் துரத்தும்போது வாலை அறுத்துவிட்டுத் தப்பி ஓடும் பிராணி எது?
1. ஓணான் 2. எலி 3. பல்லி 4. அணில்

09. முட்டை, இறைச்சி என்பவற்றைத் தரும் பிராணி எது?
1. கோழி 2. ஆடு 3. கிளி 4. புறா


10. உணவு உண்பதற்குப் பயன்படுத்தும் உபகரணம் எது?
1. கரண்டி 2. துடைதுண்டு 3. நீர்க்குவளை 4. குளிர்பானம்

11. பச்சையாக உண்ணக்கூடிய இலை வகை எது?
1. கீரை 2. அகத்தி 3. வல்லாரை 4. கரட்

**12. உமது வீடுகளில் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் பின்வரும் மரக்கறி வகைகளின் பெயர்களை படத்தை அவதானித்து எழுதுக.**



........................



........................



........................

**எதிர்ச் சொல் தருக.**

13. நண்பன் ........................................
14 நன்மை ........................................
15. இருள் ........................................
16. மகிழ்ச்சி ........................................

**பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

17. வாழை + மரம் :..............................
19. பொன் + தாலி :..............................
21. மரம் + வேர் :..............................
23. மண் + குடிசை :..............................

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

28. செந்தாமரை :..............................
20. நீர்க்குடம் :..............................
22. பூஞ்சோலை :..............................
24. பாற்குடம் :..............................

**பின்வருவனவற்றுள் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

25. மண் குளிர்ந்தால் (புல், புள்) தழைக்கும்.
26. மரத்தில் இருந்து (பழம், பளம்) கீழே விழுந்தது.
27. கடற் (கறை, கரை) யில் விளையாடினோம்.
28. மீன்களைப் பிடித்து (கரி, கறி) சமைக்கலாம்.
29. உயிர்களிடத்தில் (அன்பு, அண்பு) செலுத்துவோம்.

**ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.**

30. பூக்கள் :........................................
31. வீடு :........................................
32. ஆசிரியர் :........................................

**எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.**


33. இன்பம் :........................................
34. உண்மை :........................................
35. மேடு :........................................



**பின்வரும் சொற்களை தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 36. தேயிலை | புகைவண்டி |
| 37. செல்லப்பிராணி | விலங்குணவு |
| 38. இறைச்சி, முட்டை | கிறிஸ்தவர் |
| 39. நத்தார் | கிளி |
| 40. இரும்புப்பாதை | மலைநாடு |

**படத்தில் காட்டப்பட்டுள்ள பொருட்களுள் ஒன்றை வாங்குவதற்குச் செலுத்தப்படும் விலைப்பட்டியல் தரப்பட்டுள்ளது. இவ்விலைப் பட்டியலைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.**





41. ஒரு மாம்பழத்தினதும் ஒரு அப்பிளினதும் விலை என்ன?..............................
42. ஒரு தோடம்பழத்தினதும் ஒரு முட்டையினதும் விலை என்ன?..............................
43. இரண்டு பந்துகளின் விலை என்ன?..............................
44. ஒரு பந்தினதும் ஒரு வாழைப்பழத்தினதும் விலை என்ன?..............................
45. ஒரு பேனாவினதும் ஒரு புத்தகத்தினதும் விலை என்ன?..............................

**பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

46. பின்வருவனவற்றில் வேர் மூலம் இனம் பெருக்கும் தாவரம் எது?
   1) வாழை   2) கறிவேப்பிலை   3) பூவரசு
47. எண்ணெய் பெறப்பயன்படும் தாவர வகை எது?
   1) சூரியகாந்தி   2) செவ்வந்தி   3) மல்லிகை
48. மனிதனுக்கு உதவும் பறவை எது?
   1) கொக்கு   2) கிளி   3) காகம்
49. தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
   1) புளி   2) மா   3) தென்னை
50. நீரில் மிதக்கக் கூடிய ஓர்பொருள் பின்வருவனவற்றுள் எது?
   1) றெஜிபோம்   2) பனிக்கட்டி   3) மேற்சொன்ன இரண்டும்

விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2013 - கல்விமுரசு

# விண்வெளி திட்டத்தில் இந்தியா சதம்



(பெங்களூர்)

இந்திய திருநாட்டின் அறிவியல் முன்னேற்றத்தின் உச்சிக்கு சென்று இருக்கின்றோம் என்பதை பறை சாற்றும் விதமாக இஸ்ரோவின் ரொக்கெட் மற்றும் செயற்கை கோள் உள்பட நேற்று 100 ஆவது திட்டத்தை வெற்றிகரமாக இந்தியா செயயற்படுத்தியுள்ள இந்நிகழ்ச்சியில் பங்கேற்க பிர-தமர் மன்மோகன்சிங் மற்றும் மூத்த அறிவியல் விஞ் ஞானிகள் ஆந்திரமாநிலம் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஏவுதளத்தில் குவித்தனர். 100 ஆவது செயற்கை கோள் என்பதால் பிரதமர் இந்த நிகழ்ச்சியில் நேரடி யாக பங்கேற்றுள்ளார். இதற்கான கவுன்டவுன் நேற்று முன்தினம் தொடங்கியது. நேற்று காலை 9. 51 இற்கு விண்ணில் செலுத்தப்பட்டது. வெற்றிகரமாக சீறிப்பாய்ந்த செயற்கைகோள் சுமந்து செல்லும் ரொக்கெட் சரியான பாதை நோக்கி சென்றது.

இந்தியாவின் அறிவியலில் மைல்கல்:-

இந்திய அறிவியல் தொழில் நுட்பத்துறையின் மைல்கல்லாக 100-வது செயற்கை கோள் ஏவப்பட் டுள்ளதாக இஸ்ரோ வின் இயக்குநர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: கடந்த 1975 ஆம் ஆண்டு இந்தியாவின் சார்பில் செலுத்தப்பட்ட ஆர்யபட்டா செயற்கைகோள் முதற்கொண்டு இதுவரை ரொக்கெட் மற்றும் செயற்கை கோள் என மொத்தம் 99 எண்ணிக்கை விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. இது 100ஆவது திட்டமா கும் எனத் தெரிவித்தார்

இந்தியச் செய்திகள்



சென்னையில் பெய்த கனமழையால், நூறடிச்சாலையில் உள்ள நெற்குன்றம் பேருந்து நிறுத்த நிழற்குடை மீது மரம் விழுந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் நொறுங்கியுள்ளதைக் காணலாம்.

## நேர்மையானவர்களை தேர்ந்தெடுங்கள் - அண்ணா ஹசாரே -



(ராலேகான் சித்தி)

தேர்தலில் நேர்மையான வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று சமூக சேவகர் அண்ணா ஹசாரே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது சொந்த கிராமமான ராலேகான் சித்தி யில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளரிடம் கூறியதாவது.

நான் அரசியல் கட்சியை ஆரம்பிக்கவும் மாட்டேன். தேர்தலில் போட்டியிடவும் மாட்டேன். எனினும், நேர்மையான, கை சுத்தமான வேட்பாளர்களை ஆதரித்துப் பிரசாரம் செய்யத் தயாராக இருக்கி றேன். மக்கள் தங்களின் எம்.பி., எம்.எல்.ஏ.க்களை அவர்கள் செய் துள்ள சமூக சேவை, மற்றும் அவர்களின் தனிப்பட்ட நடத்தை, ஆகிய வற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். அதேபோல், வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் அறிக்கையை அமுல்படுத்துவதில் அர்ப்பணிப்பு உள்ளவர்களாகவும் தங்களின் ஒவ்வொரு செயலுக் கும் சாமானிய மக்களுக்குப் பதிலளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். நடப்பு நாடாளுமன்றத்தில் நேர்மையான எம்.பி.க்கள் போதுமான அளவில் இல்லாத காரணத்தால், வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற இயலவில்லை என்று ஹசாரே தெரிவித்தார்.

முன்னதாக, டில்லியில் இருந்து ராலேகான் சித்தி கிராமத்துக்கு வந்த அரவிந்த் கேஜரிவால், மணீஷ் சிசோடியா, உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள், ஹசாரேவைச் சந்தித்து விவாதித்தனர்.

# நாடாளுமன்ற தேர்தலில் விஜயகாந்துடன் கூட்டணி

(புதுடில்லி)


நாடாளுமன்றத்துக்கு 2014ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 18 மாதங்களே இருப்பதால், காங்கிரஸ் கட்சி தயாராகத் தொடங்கி விட்டது.

2004 மற்றும் 2009ஆம் ஆண்டு தேர்தல்களில் தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் மாநில கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே ஆட்சி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கூட்டணி கட்சிகளால் கடந்த சில ஆண்டுகளாக காங்கிரஸ் தலைவர்கள் பல தடவை நெருக்கடிக் குள்ளானார்கள். இதன் காரணமாக காங்கிரஸ் கட்சிக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் இடையே உரசலும், கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டுள்ளது. தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு வெற்றி பெற்றால்தான் கூட்டணி கட்சிகளின் நெருக்கடிகளில் இருந்து தப்பிக்க முடியும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகிறார்கள்.

எனவே 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் மாற்றம் ஏற்படும் என்று தெரிகிறது. குறிப்பாக பெரிய மாநிலங்களில் கணிசமான தொகுதிகளை கைப்பற்றினால்தான் பெரும்பான்மை பலம்பெற முடியும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கருதுகிறார்கள்.

தி.மு.க., அ.தி.மு.க.வை தவிர்த்து விட்டு விஜயகாந்தின் தே.மு.தி.க.வுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஆர்வமாக



இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இன்னும் சில மாதங்களில் காங்கிரஸ் - தே.மு.தி.க. இடையே பேச்சுவார்த்தை தொடங்கும் என்று புதுடில்லி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அணு எதிர்ப்பாளர்கள் கூடங்குளத்தை முற்றுகை

(திருநெல்வேலி)

கூடங்குளத்தில் யுரேனியம் நிரப்பும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அணு-மின் நிலையத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்துள்ள போராட்டக்குழுவினர் பேரணி யாக புறப்பட்டனர். தேவையற்ற பீதியை கிளப்ப வேண்டாம் என்ற நோக்கில் பொலி ஸார் தடி மற்றும் துப்பாக்கி கொண்டு வரா-மல் பாதுகாப்பு பணியில் ஈடு பட மறைமுக உத்தரவு இடப் பட்டுள்ளது. ஆனால் அறி வித்த , பாதையில் வராமல் இடிந்தகரையில் இருந்து கடற்கரை வழியாக சென்று கூடங்குளத்தின் பின்பகுதி வழியாக முற்றுகையிட பேரணி பாதை திடீரென மாற்றப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் தங்களின் பாதுகாப்பு பணியை மாற்றுவதில் சிரமம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு பதட்டம் ஏற்பட்டுள்ளது.

நேற்று போராட்டம் தொடங் கும் முன்னதாக இடிந்தகரை யில் தேவாலயம் முன்பாக உதயக்குமார் மற்றும் புஷ்பரா ஜன் தலைமையில் சுமார் 3 ஆயிரம் பேர் கூடினர். போராட்டம் குறித்து விவாதித்தனர். தாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் யோசனை வழங்கப்பட்டது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது ப்த்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறா ரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : ந. கம்சிகா

முகவரி: சங்கத்தானை, சாவகச்சேரி.

அகவை 8இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : ரி. மதுஷன்

முகவரி: கைதடி மேற்கு கைதடி.

அகவை 5இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# உலகப் பொருளாதாரத்தில் நெருக்கடி; 7 செல்வந்த நாடுகளின் வளர்ச்சி பூச்சியம்



(சொர்னோபியோ)

உலகப் பொருளாதாரம் ஒரு மாபெரும் புயலைச் சந்திக்கவுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியின் கோமோ ஏரியின் அருகே உள்ள செர்னோபியோ நகரில் ஆண்டுதோறும் உலகப் பொருளாதார நிபுணர்கள் கூடி விவாதிப்பது வழக்கம்.

Ambrosetti Forum என்று அழைக்கப்படும் இந்த மாநாட்டில் உலகத் தலைவர்களும், சர்வதேச நிதி விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் நிபுணரகளும் கலந்து கொள்ளும் இந்த ஆண்டுக்கான கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் பேசிய பெரும்பாலான சர்வதேச நிபுணர்களும், உலகம் ஒரு மாபெரும் பொருளாதாரப் புயலை சந்திக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார தேக்கம் தொடரப் போகிறது. அமெரிக்க பொருளாதாரத்தை அந்நாட்டு அரசியல் போட்டி கீழே தள்ளிவிடப் போகிறது. இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைய ஆரம்பித்து விட்டது, இத்தோடு ஈரானின் அணு ஆயுத விவகாரத்தால் நிலவும் ஆபத்தான சூழல்.. இவை அனைத்தும் சேர்ந்து உலகைப் புரட்டிப் போடப் போகின்றன என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அதிகரித்து வரும் கடன் சுமையும் அந் நாடுகளின் அரசியல் நிலவரமும் உலகை வாட்டும் முக்கியமான கவலைக்குரிய விடயங்கள் என்று கூறும் நிபுணர்கள், இதனால் யூரோ நாணயத்தின் மதிப்பு அதிவேகமாகச் சரிந்து வருவதையும் சுட்டிக் காட்டினர்.

இந் நிலையில் உலகின் பணககார நாடுகளின் கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் OECD (Organisation for Economic Co-operation and Development) அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச பொருளாதார வளர்ச்சி சரிய ஆரம்பித்து விட்டது.

அடுத்த சில காலத்துக்கு உலகின் முக்கிய 7 பணக்கார நாடுகளின் வளர்ச்சி விகிதம் வெறும் 0.3 சதவீதமாக கிட்டத்தட்ட பூச்சியமாகத்தான் இருக்கும். இதனால் சர்வதேச அளவில் முதலீடுகளும் வர்த்தகமும் ஸ்தம்பிக்கும். இதன் எதிரொலியாக வேலை வாய்ப்புகளும் குறையும் என்று கூறப்பட்டுள்ளது.

# சீனாவில் நிலநடுக்கம்; பலியானோர் தொகை 80



சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை 80ஆக உயர்ந்துள்ளது, 700இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள யுனான், குய்சூ மாகாணங்களில் கடந்த வெள்ளிகிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

லூசிகி நகரில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இதையடுத்து 16 முறை தொடர்ந்து நில அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர்.

கட்டடங்கள் நொருங்கியதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. 700இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மீட்புப் படையினரால் நிவாரணப் பணிகளை வேகமாகச் செய்ய் முடியவில்லை. இடிபாடுகளில் சிக்கி மேலும் பலர் இறந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பல இடங்களில் மின்சாரம், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் 7 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் நொருங்கி உள்ளன. விதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 2ஆவது நாளாக மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

# உருகும் பனிப்பாறைகள்



பனிப்பாறைகளால் ஆன பூமியின் வடகோடியில் உள்ள ஆர்டிக் பிரதேசத்தில் பூமியின் வெப்பநிலை சமீபகாலமாக அதிகரித்து காணப்படுகிறது. ஆனால் மைனஸ் டிகிரியில் குளிர் இருந்தும், இந்த வருடம் பனிப்பாறைகள் வெகு வேகமாக உருகி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களில் இல்லாத வகையில், கடலில் மிதக்கும் இந்தப் பனிப்பாறைகள் உருகி மெலிந்து வருவது ஐரோப்பாவின் காலநிலையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

உருகிய பனிப்பாறைகள் ஸ்வல்பர்ட் மற்றும் கிரீன்லாந்து வழியாக ஆர்டிக் பிரதேசத்தை விட்டு வெளியே செல்லும்போது அதை ஆராய உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்த ஒரு புரிந்துணர்வுக்கு வரவேண்டும் என்று நோர்வே ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சூரியனிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் இப்பனிப்பாறைகள் மீது பட்டு மீண்டும் எதிரொளிப்பதால், அவை மீண்டும் மேலே ஆகாயத்திற்கு அனுப்பப்பட்டன.

ஆனால் பனிப்பாறைகள் உருகி இப்பிரதேசத்தை விட்டு விலகிச் செல்வதால், நேரடியாக வெப்பத்தை உறிஞ்சி மேலும் பிரச்சினையை உருவாக்கும் என்றும் கூறப்படுகிறது.

## உலகச் செய்திகள்

# செவ்வாய்க் கிரகத்தில் டயர் தடம்



அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா அனுப்பிய கியூரியாசிட்டி விண்வெளி ஓடம் செவ்வாயில் நகர்ந்து சென்றதால், அழுத்தமான டயர் தடம் பதித்துள்ளது.

கியூரியாசிட்டி ரோவர் கடந்த மாதம் 5ஆம் திகதி செவ்வாயில் தரையிறங்கியது. ஒரு மாதத்தில் அது ஒரு கால்பந்தாட்ட மைதானத்தின் நீளத்தைவிட சற்றே அதிகமான தொலைவுக்கு(368 அடி) நகர்ந்து சென்று ஆய்வு செய்துள்ளது.

கியூரியாசிட்டி நகர்ந்து சென்ற இடத்தில் டயர் தடம் அழுத்தமாக பதிந்துள்ளது. இது செவ்வாயைச் சுற்றி வரும் மற்றொரு விண்வெளி ஓடம் மற்றும் கியூரியாசிட்டியின் பின்பக்கத்தில் உள்ள கமரா ஆகியவற்றின் மூலம் எடுத்து பூமிக்கு அனுப்பப்பட்ட புகைப் படங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கு முன் நாசா அனுப்பிய ரோவர்கள் இதுபோன்ற டயர் தடத்தை ஏற்படுத்தியது இல்லை.

அடுத்த ஒரு வாரத்துக்கு கியூரியாசிட்டி வேறு எங்கும் நகராது. அதில் இணைக்கப்பட்டுள்ள இயந்திர கையில் கத்தி பொருத்தப்பட்டுள்ளது. அது பாறைகள், மண்ணை கிளறி எடுத்து அதில் உள்ள வேதிப்பொருள்கள குறித்து ஆய்வு செய்ய உதவும் என்று கியூரியாசிட்டியை இயக்கி வரும் விஞ்ஞானியான மைக்கெல் வாட்கின்ஸ் தெரிவித்தார்.

# ஈரான்மீது கடுமையான கட்டுப்பாடுகள்; பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி கோரிக்கை




பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் மற்ற ஐரோப்பிய நாடுகளையும் ஈரான் மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்குமாறு அவசரப்படுத்தியுள்ளன. ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்ட்டெர்வெல் ஈரான் எந்த நல்ல முடிவையும் தெரிவிக்காததால் உடனடி நடவடிக்கை தேவை என்றார்.

இவரது கருத்திற்கு பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் லாரண்ட் ஃபேபியசும் பிரிட்டனின் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேகும் ஆதரவு தெரிவித்துள்ளனர். சைப்ரஸில் நடந்த கூட்டத்திற்குப் பின்பு இந்த மூவரும் ஈரான் மீதான கட்டுப்பாடுகளைக் கடுமையான முறையில் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றனர்.

வெஸ்ட்டெர்வெல், ரொய்ட்டருக்கு அளித்த பேட்டியில், ஈரான் பேச்சுவார்த்தைக்கு இசைந்துவராததால் அடுத்தகட்ட நடவடிக்கையைத் தொடங்க வேணடும். அந்த நடவடிக்கை அடுத்த ஆண்டுக்கானது அல்ல, அடுத்த வாரங்களுக்கானது என்று இந்தக் கட்டுப்பாடுகளின் உடனடித் தேவையை வலியுறுத்தினார்.

யூலையில் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்கு விதித்த கட்டுப்பாடு, இஸ்லாமிய குடியரசு நாடுகளிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இன்னும் ஐந்து நாட்களில் ஈரான் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றார் ஃபேபியஸ்.

# மலையில் மோதியது இராணுவ ஹெலிகொப்டர்



(பாட்லிக்)

ரஷ்யாவில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் பலியாகினர்.

ரஷ்யாவின் இராணுவ ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் ததெஸ்தான் குடியரசின் ஒரு மலைப் பகுதியை கடக்கும் போது மலை மீது மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உள்ளிட்ட 3 பேர் பலியானார்கள்.

இது குறித்து ரஷ்ய உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஆலெக் கூறுகையில், பாட்லிக் கிராமம் அருகே ஹெலிகொப்டர் சென்ற போது அங்குள்ள மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

மி-35 என்ற ரக ஹெலிகொப்டரே கடும் பனியால் வழி தவறி விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்தார்.

# மகளின் குழந்தையை பெற்றெடுத்த தாய்




சிகாகோவில் செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் தாய் ஒருவர், தனது மகளின் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.


சிகாகோவைச் சேர்ந்தவர் சின்டி ரூட்ஜெல் (வயது-53). அவரது மகள் எமிலி ஜோர்டான்(வயது-29) கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு எமிலி கர்ப்பமானார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரது கர்பப்பையின் வாயில் புற்றுநோய் இருப்பதைக் கண்டறிந்தனர். இதையடுத்து கருவைச் கலைத்ததுடன் எமிலியின் கருக்குழாய் அகற்றப்பட்டது.

குழந்தைக்காக ஏங்கிய எமிலிக்கு சிகாகோ மருத்துவமனை நம்பிக்கை அளித்தது. செயற்கை கருத்தரிப்பு மூலம் எமிலியின் கருமுட்டையை அவரது கணவனின் விந்தணுவுடன் சேர்த்து அதை எமிலியின் தாய் சின்டியின் கருப்பையில் ஏற்றினர். சின்டி இந்த வாரம் அழகிய பெண் குழந்தையைப் பெற் றெடுத தார். அதற்கு எல்லி என்று பெயர் வைத்துள்ளனர்.

இது குறித்து சின்டி கூறுகையில், எமிலிக்கு குழந்தை பிறக்காது என்பதைக் கேள்விப்பட்டு மனமுடைந்து விட்டேன். அதன் பிறகு செயற்கைக் கருத்தரிப்பு மூலம் நான் என் மகளுக்கு எனது பேத்தியைப் பெற்றெடுத்துக் கொடுத்தது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஊதுவத்தி தொழிற்பயிற்சி





(யாழ்ப்பாணம்)

பாசிக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்திய அனுசரணையுடன் ஜே/90 நாவலடி அரியாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்களுக்கு ஊதுவத்தி உற்பத்திக்கான பயிற்சி வழங்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி நாவலடி கிழக்கு அரியாலை கிழக்கு உதயநிலா முன்பள்ளியில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைபபாளரும் நல்லூர் பிரதேச எதிர்க் கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் இப்பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் மேற்படி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் இப்பயிற்சியில் 30 பேர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

குடும்பங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அரியாலை கிழக்கு கிராம அலுவலர் எஸ். விஜிதன், பாசிக் நிறுவன இணைப்பாளர், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீரற்ற உள்ளூர் பேருந்து சேவையால் மாணவர்களின் கற்றல் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்களாக இருப்பதனால் உரிய நேரத்திற்கு இவர்கள் வந்து செல்வதில் பல்வேறு உள்ளூர் போக்குவரவு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிககப்படுகிறது.

சகல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான விடுதிகள் இன்மையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல உள்ளூர் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போக்குவரவு சீரின்மையால் பிரதான பேருந்து தரிப்பிடங்களிலிருந்து உள்ளூர் பாடசாலைக்குச் செல்வதிலையே இவ்வாறான சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

குறிப்பாக பூநகரி பிரதேச பாடசாலைகளுக்கு இவ்வாறான பாதிப்புகள் இடம்பெறுவதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# துர்நாற்றம் வீசும் மல்லாவி பொதுச் சந்தை

(மல்லாவி)

மல்லாவி பொதுச் சந்தை மீன் விற்பனைப் பகுதி உள்ளிட்ட ஏனைய பகுதிகள் பெரும் துர்நாற்றம் வீசுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள கிணறு ஒன்றிலிருந்தே நீர்ப்பம்பி ஊடாக நீர்விநியோகம் செய்யப்படுவது வழக்கம். இந்த நீர்ப்பம்பி கடந்த மூன்று மாத காலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதை அடுத்து அங்கு பொதுச்சந்தையைக் கழுவுவதற்குக் கூட நீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னர் வர்த்தகர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, சென்ற மாத இறுதிப் பகுதியில் குறித்த சந்தையின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நீர்ப்பம்பி ஒன்றை இணைப்புச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இன்று வரை இந்த நீர்ப்பம்பி இணைக்கப்படவில்லை எனவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, வர்த்தகர்களின் நலன் கருதி பிரதேசசபை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மல்லாவிப் பொதுச்சந்தை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (28,143)

# இடமாற்றம் காணாத கிராம சேவையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பல கிராம உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் பல வருடங்களாக இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல கிராம அலுவலர் பிரிவுகளில் 15 வருடங்களுக்கு மேலாக சில கிராம அலுவலர்கள் சேவையாற்றி வருவதாகத் தெரியவருகின்றது.

6 வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு தகுதியுடையவர்கள் என்னும் நடைமுறை இருந்தபோதிலும் இவர்களுக்கான இடமாற்றங்கள் எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

வலி.கிழக்கு மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகங்களுக்குட்பட்ட இடங்களில் கிராம அலுவலர்களுக்கான இடமாற்றம் இடம்பெற்ற போதிலும் ஏனைய இடங்களில் இம்மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை.

ஒரே பகுதியில் ஒரு கிராம அலுவலர் தொடர்ந்து பல வருடங்கள் சேவையாற்றுவது என்பது பல கேள்விகளுக்கும் இடமளிக்கும் என்பதால் கிராம அலுவலர்களின் இடமாற்றம் அவசியமானது எனக் கருதப்படுகின்றது. கிராம அலுவலர்களும் அரச உத்தியோகத்தர்களே என்பதால் இவர்களும் இடமாற்றத்துக்குரியவர்களே என பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## 12 இலட்சம்...

அவற்றில் சுமார் ஒரு இலட்சத்து 26ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகளின்படி பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை 3336417 ஆகும். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 2138739. இவற்றில் செல்லுபடியான வாக்குகள் 2012312 என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். போதனா....

நாளை இக்கட்டடப் பணிகள் நிறைவுறும் என்றும் நாளைய தினம் வைத்தியசாலை நிர்வாகத்திடம் இக்கட்டடம் கையளிக்கப்படும் என்று மெகா நிறுவனத்தின் செயற்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நாளை இக்கட்டடம் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டாலும் மக்களின் பாவனைக்கு அடுத்த ஆண்டு ஜனவரியிலேயே திறந்துவைக்கப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதுவரை இக்கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களைப் பரிசோதித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதால் இதுபற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னரே இக்கட்டடத்தின் பயன்பாட்டை நோயாளிகள் பெற்றுக்கொள்ள முடியும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ)

## திருநெல்வேலியில்...

வந்த மற்றுமொரு இளைஞர் குழு இவர்களுடன் வாய்த்தகராற்றில் ஈடுபட்டுள்ளது. வாய்த்தகராறு முற்றி கைகலப்பாகிய நிலையில், முச்சக்கரவண்டியில் வந்த ஒருவர் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் ஓங்கி தலையில் அடித்து இவரைக் கொலைசெய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தலையில் மோசமாக தாக்கப்பட்டு தலை பிளந்த நிலையில் இரத்தப்பெருக்குக் காரணமாக அவர் உயிரழந்தார். தாக்குதலில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்செல்லப்பட்டுள்ளார்.

கொலை நடந்த இடத்திற்கு நேற்று இரவு 8.20 மணிக்கு வந்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இறந்த இளைஞரின் உடலை பிரேத பரிசோதனைக்காக் யாழ். போதனாவைத்திய சாலைக்கு எடுத்து செல்லுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கினார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ள்னர். (137)

## கிழக்கில்...

தெரிவித்துள்ளது. இருந்தபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு கட்டாயமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களை பெற்றால், ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் உதவ வேண்டுமென ஏற்கனவே சம்பந்தன் அறிவிப்புச் செய்திருந்தார். அவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்குமாயின் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளர் தண்டாயுபானி முதலமைச்சராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட இரா.துரைரெத்தினமும் கூடுதலான விருப்பு வாக்கை பெற்றுள்ளதனால் அவரும் முதலமைச்சராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எவருக்கு...

ஏற்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடமிருந்து தனக்கு முதலாவதாக தொலைபேசி அழைப்பு வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்ததாகவும் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்க நான் முதலில் கடமைப்பட்டுள்ளேன். முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அனைத்துத் தொகுதிகளிலும் நாம் வெற்றியடைந்துள்ளோம்.

மாகாண சபை ஆட்சியை அமைப்பதற்கான ஆதரவினை யாருக்கும் வழங்குவதற்கு முன்னர், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நான் கலந்துரையாட வேண்டும். எவ்வாறாயினும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உருவாக்குவதற்கு ஆதரவளிப்போம் என அவர் தெரிவித்தார்.

## முஸ்லிம் முதலமைச்சராவதை...

மக்களால் எமக்குத்தரப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றவேண்டியது எமது கடமை. இந்த தேர்தல் வெற்றியை அரசாங்கம் களவாட நாம் அனுமதிக்கமாட்டோம். அரசாங்கத்தரப்பு இப்போது பெற்றுள்ள சாதாரண வெற்றியைக்கொண்டு அவர்கள் ஆட்சியமைக்க அனுமதிக்க முடியாது. மேலும் கிழக்கு மாகாண ஆளுநர் - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மாகாண ஆட்சியை அமைக்க அழைத்தால் அதனை நாம் சட்டரீதியாக தடுப்போம்.

கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்திய முறை மூலம் எமக்கு கிடைக்கவேண்டிய வெற்றியை அரசாங்கம் சூறையாடியுள்ளது. இந்தத் தேர்தலில் அரசாங்கத்தை எதிர்த்த கட்சிகள் மூன்றும் வெற்றிபெற்றுள்ளது.

மூன்று கட்சிகளினதும் மொத்த ஆசன எண்ணிக்கை 22. ஆனால் அரசாங்கம் மற்றும் அதனோடு இணைந்து செயற்படக்கூடிய இன்னுமொரு கட்சி ஆகிய இரண்டினதும் ஆசன எண்ணிக்கை 15. எனவே ஐ.ம.சு.மு. மாகாண ஆட்சியை அமைப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை.

நேற்றுக் காலை கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் எமது கட்சிப் பொதுச் செயலாளர் - மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன 22 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளன. எனவே கிழக்கு மாகாண ஆட்சியை அமைக்கத் தேவையான பெரும்பான்மைப் பலம் எமக்கு உள்ளது. ஆகவே அத்தகைய ஆட்சியமைப்பதற்கும் அதற்கேதுவாக மாகாண முதலமைச்சரை நியமிக்கவும் எமக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்கவும் என்று நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்று மேலும் குறிப்பிட்டார்.

## எண்ணெய்...

உறுதிசெய்யவில்லை. ஆனால் 3 ஆம் கிணறான CLPL-Dorado North 1-82K/1 வெறுமையாகக் காணப்படுவதாகக் கூறி அதனைக் கடந்த ஆண்டு டிசம்பரில் கைவிட்டுவிட்டது.

மேலும் ஆராய்ச்சிகளின் பின்னர் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் இவற்றின் வணிகரீதியான பெறுமதி தொடர்பில் அந்நிறுவனம் அறிவிக்கவுள்ளது.

அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டாம் கட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணியின் போது 4 ஆவது கிணற்றைத் தோண்டவுள்ளதாக கெய்ன் இந்திய நிறுவனம் தெரிவிக்கின்றது.

மன்னார் கடற்பரப்பில் 8 எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சிப் பகுதிகள் காணப்படுகின்றன.

இதில் இரண்டு சீனாவுக்கும், இரண்டு இந்தியாவுக்கும் அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கென வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான 'கெஸ்புரொம்' அண்மையில் எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடர்பாக கலந்துரையாட இலங்கைக்கு வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்ற தாக்குதல் 11 பேர் பொலிஸில் சரண்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்று இடம்பெறவுள்ள நிலையில் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டு மன்னார் பொலிஸாரினாலும் புலனாய்வுத் துறையினராலும் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் 11 பேர் நேற்று மாலை 4.30 மணியளவில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதோடு பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் அரச திணைக்களப் பணியாளர்கள், பொலிஸ் கான்ஸ்டபில், பொது மக்கள் என 19 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலும் பலரை மன்னார் பொலிஸார் தேடி வந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்று மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில் கைது செய்யப்பட்ட 19 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். குறித்த சந்தேக நபர்களிடம் முழுமையான வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட பின் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மன்னார் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் திட்டங்களுக்கு மீண்டும் மக்கள் அங்கீகாரம்

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் ஜனாதிபதியின் செயற்றிட்டங்களுக்கு மக்கள் மீண்டும் ஒரு முறை ஆணை வழங்கியுள்ளனர் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

விசேடமாகப் பொலன்னறுவை விவசாயிகளின் பெரும்பான்மையான வாக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே கிடைத்துள்ளன.

நீண்ட கால வறட்சி இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துக்கு பெரும் சவாலாக இருந்த வேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு நேரடியாக விஜயம் செய்து அந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்கினார்.

ஆனால் எதிர்க்கட்சியோ வறட்சிக்கு அரசைக் குறைகூறிக் கொண்டு மக்களின் வாக்குகளைக் கேட்டுநின்றது. எனினும், பொது மக்கள் முக்கியமாக விவசாயிகள் இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தியுள்ளனர் என்றும் கூறினார்.

## அவுஸ்ரேலியா செல்ல முயன்று திரும்பி வந்த 18 பேர் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியா நோக்கி ரோலர் படகொன்றில் பயணித்ததாகக் கூறப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள், படகில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 23 நாட்களின் பின்னர் மீண்டும் திரும்பிய நிலையில் அவர்கள் யால சரணாலயத்திற்கு அருகிலுள்ள அமதுவ பகுதியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அவுஸ்ரேலியா நோக்கி றோலர் படகில் பயணித்த் 32 பேர் தாயகம் திரும்பியதாகவும், இதன்போது 10 சிங்களவர்களும், 8 தமிழர்களும் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

இவர்களை அழைத்துவந்ததாகக் கூறப்படும் மேலும் 7 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## புதிய சீருடை அறிமுகம்

(கொழும்பு)

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துகளில் கடமை புரியும் சாரதி மற்றும் நடத்துனருக்கு புதிய சீருடை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

போக்குவரத்தில் உள்ள சிக்கல்கள் மற்றும் பொறுப்புணர்வுகளுக்கு அமைய இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

# கையடக்க தொலைபேசிப் பாவனை மன்னார் மாணவரிடையே அதிகரிப்பு

மன்னார் மாணவர்கள் மத்தியில் தற்போது கையடக்கத் தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்தப் பாடசாலை நிர்வாகம் முன்வர வேண்டும் என மாணவர்களின் பெற்றோரும், சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது மன்னார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் வீடுகளில் கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்துகின்றனர். அவர்களில் சிலர் கைத்தொலைபேசியினைப் பாடசாலைகளுக்கு கொண்டு சென்று மறைமுகமாகப் பயன்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த விடயத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கண்காணித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குறித்த கையடக்கத் தொலைபேசியில் சினிமாப்பாடல்கள் உள்ளிட்ட பல விடயங்களை பதிவுசெய்து வைத்து பார்ப்பதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம் மாலை நேர வகுப்பிற்கு செல்லும் மாணவ மாணவிகள் கையடக்கத் தொலைபேசியினை எடுத்துச் செல்வதாகவும் தெரிவித்துள்ள பெற்றோர் அவர்கள் தொடர்ந்தும் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் கல்வி நடவடிக்கை தொடர்ந்தும் பாதிக்கப்படும் எனப் பெற்றோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றோர் விபரம்

## மட்டக்களப்பு

**இலங்கை தமிழரசுக் கட்சி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| இரா. துரைரெத்தினம் | 29,148 |
| கே. துரைராஜசிங்கம் | 27,719 |
| ஞா.கிருஷ்ணபிள்ளை | 20,200 |
| இ.பிரசன்னா | 17,304 |
| மா.நடராசா | 16,681 |
| கோ.கருணாகரம் | 16,536 |

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| சிவனேசதுரை சந்திரகாந்தன் | 22,338 |
| எம்.எஸ்.அமீரலி | 21,271 |
| சிப்லி பாரூக் | 20,407 |
| எம்.எஸ்.சுபையிர் | 19,303 |

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| ஹாபீஸ் நஷீட் அஹமட் | 11,401 |

## திருகோணமலை மாவட்டம்

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| ஆரியவதி கலபதி | 14,224 |
| பிரியந்த பத்திரன | 12,393 |
| நஜீப் அப்துல் மஜீட் | 11,726 |

**இலங்கை தமிழரசுக் கட்சி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| எஸ். தண்டாயுதபாணி | 20,850 |
| குமார்சுவாமி நாகேஸ்வரன் | 10,910 |
| ஜெஹதீஸன் ஜனார்த்தனன் | 8,560 |

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| ரம்ழான் அன்வர் | 10,904 |
| ஹசன் மௌலவி | 10,123 |

**ஐக்கிய தேசியக் கட்சி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| இம்ரான் மஹ்ரூப் | 10,048 |

**தேசிய சுதந்திர முன்னணி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| ஜயந்த விஜயசேகர | 7,303 |

## அம்பாறை மாவட்டம்

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| விமல வீர திசாநாயக்க | 31815 |
| எம்.எஸ்.உதுமாலெவ்வை | 24033 |
| டீ.வீரசிங்க | 20922 |
| ஆரிப் சம்சுதீன் | 19680 |
| ஏ.எம்.அமீர் | 19671 |

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| ஆதம்பாவா தவம் | 32330 |
| ஏ.எம்.ஜெமீல் | 22357 |
| ஐ.எம்.எம்.மன்சூர் | 21759 |
| ஏ.எல்.எம்.நசீர் | 18327 |

**ஐக்கிய தேசியக் கட்சி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| தயாகமகே | 41064 |
| சந்திரதாச கலபதி | 20459 |
| மஞ்சுளா பெனான்டோ | 14897 |

**இலங்கை தமிழரசுக் கட்சி**

| பெயர் | விருப்பு வாக்கு |
|---|---|
| தவராஜா கலையரசன் | 12122 |
| ஐ.முருகேசு | 10812 |

## அவுஸ்ரேலியா செல்ல முயன்ற 95 இலங்கை அகதிகள் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியா நோக்கி சட்ட விரோதமாக பயணிக்கவிருந்ததாகக் கூறப்படும் 95 இலங்கை அகதிகள் உட்பட 97 பேரை இந்தியாவின் பெங்களூர் பொலிஸார் நேற்று முன்தினம் இடை மறித்துக் கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவுஸ்ரேலியாவில் வேலைவாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகக் கூறி இவர்களிடம் பணம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் 13 பேரையும் இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.